بسم الله الرحمن الرحيم

இறையச்சம் இவ்வுலகின் - மறுவுலகின் அனைத்து நன்மைகளையும் ஒருங்கே தன்னுள் சுருட்டி வைத்துக் கொள்ளும் சிந்தனையின் - செயலின் வழியாகும்.

அல்லாஹ்வின் வேதம் மற்றும் இறைத்தூதர் அருளிய வழிகாட்டுதல்களின் நோக்கமே இறையச்சத்தை உண்டாக்குவதும் இறையச்சமுடையவர்களை உருவாக்குவதுமே ஆகும். தனக்குள் இறையச்ச பண்பைப் பெற்றிருக்கும் ஒவ்வொருவருக்கும் குர்ஆன் நேர்வழிகாட்டும் வேதமாகும். வேத வழிகாட்டுதலைப் பெறுவதற்காக வேதம் காட்டும் பாதையில் நடைபோடுவதற்காக இறையச்சம் என்பது தவிர்க்க முடியாதது என்பதே குர்ஆனின் நோக்கமாகும். குர்ஆன் இறையச்சமுள்ளவர்களை உருவாக்குவதற்கென்றே இறங்கியது என்றும் பொருள் கொள்ளலாம்.

## இறையச்சம்

இறையச்சம் குறித்து நாம் அனைவரும் அறிந்துள்ளோம், புரிந்துள்ளோம். அதன் கருத்தோட்டமும் வரலாறும் நம்மிடையே இருக்கின்றன. இச்சொல் அரபி மொழியில் 'விகாயத்' என்ற சொல்லிலிருந்து உருவானது. இதன் பொருள் 'தவிர்த்துக் கொள்வது' என்பதாகும். இதிலிருந்தே தக்வா என்ற சொல்லும் பிறந்தது. தன்னைத் தானே தவிர்த்துக் கொள்வது என்பதுதான் தக்வாவின் அகராதி மற்றும் மொழிமரபின் பொருள் ஆகும்.

இழப்பையும் இழப்பையும் ஏற்படுத்தும் விஷயங்களிலிருந்து தவிர்ந்திருக்கும் உள்ளுணர்வை மனிதனின் இயற்கை அமைப்பில் அல்லாஹ் வைத்துள்ளான். நமக்கு



இழப்பை ஏற்படுத்தும் எல்லாவற்றிலிருந்தும் தவிர்த்திருக்கவே நாம் விரும்புகிறோம். அதற்கான முயற்சிகளைச் செய்கிறோம். நம் முழு வாழ்வும் இரண்டு விஷயங்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கும் போது தெரிய வரும். முதலாவது விஷயம், இழப்பை ஏற்படுத்தும் எனக் கருதும் அனைத்திலிருந்தும் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது. இரண்டாவது, நமக்கு இலாபத்தை அளிக்கும் விஷயங்களை அடைவதற்கு முயல்வது.

இலாபம், இழப்பு இவற்றின் அளவுகோலில் வித்தியாசம் இருக்கலாம். இறைநம்பிக்கையாளராக இருந்தாலும், இறை நிராகரிப்பாளராக இருந்தாலும் மனிதனின் இயல்பில் இவ்விரண்டு உணர்வுகளும் இணைந்தே உள்ளன. வாழ்வின் அனைத்து சிந்தனைகளும், அனைத்து செயல்களும் இவ்விரண்டு விஷயங்களோடு தீர்மானிக்கப் பட்டுள்ளன. உயிர், உடமை, மரியாதை, கண்ணியம் ஆகியவற்றிற்கு இழப்பை ஏற்படுத்தும் விஷயங்களுக்கு எதிராக மனிதன் தற்காப்புப் பணியில் இறங்குகிறான். தன்னை இழப்பை விட்டும் தற்காத்துக் கொள்கிறான். படிப்பில், வியாபாரத்தில் எங்கெல்லாம் முன்னேற்றத்தைப் பார்க்கிறானோ அங்கெல்லாம் தன் எண்ணங்களை வெற்றி பெறச் செய்வதற்காகவும் தனக்குரிய மரியாதையைப் பெறுவதற்காகவும் களமிறங்கி விடுகிறான்.

ஒரு கோணத்தில் பார்க்கும்போது இறையச்சம் என்பது எதிர்மறையான பண்பு என்கிற உணர்வு ஏற்படுகிறது. ஒரு விவசாயி விதை விதைத்துவிட்டு வெளியிலிருந்து வரும் அனைத்து ஆபத்துகளிலிருந்தும் இழப்புகளிலிருந்தும் தன்னுடைய விவசாயத்தை, பயிரைப் பாதுகாக்கிறார். பிறகு பயிர் பச்சை பசேலென வளர்கிறது.

நல்ல விளைச்சலையும் கொடுக்கிறது. இதே நோக்கில் பார்க்கும் போது இறையச்சம் என்பதும் மனிதனின் முழு வாழ்விலும் நல்ல அமல்களை நிரப்பி விடுவதற்கான பெயராகவும் உள்ளது. வித்தியாசம் ஒன்று உள்ளது. நல் அமல்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முன் ஒருவர் குறைந்த பட்சம் இழப்பை ஏற்படுத்தக் கூடிய அனைத்து விஷயங் களிலிருந்தும் விலகி நிற்க வேண்டியது அவசியமாகிறது.

அகராதியின்படி இறையச்சம் என்பதன் கருத்துப் பொருள் பரந்து விரிந்ததாக உள்ளது. அப்பொருளின்படி இலட்சியத்திற்கு எதிரானவற்றிலிருந்து வாழ்க்கையைக் காத்துக் கொள்ள வேண்டும் என்பதுதான் கண்களுக்கு முன் நிற்கிறது. வாழ்வின் இலட்சியம் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து வாழ்வதிலும் அவனின் திருப்தியையும் சுவனத்தையும் பெறுவதாக இருந்தால்... வாழ்வின் நோக்கத்தை, வாழ்வின் மெஷினை, ஆகிரத்தை அடைய வேண்டும் எனும் கேரியரை, அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் எனும் ஆவலை நிறைவு செய்வதற்காக அவனுடைய மகிழ்ச்சியைப் பெறுவதற்குத் தடையாய் இருந்து இழப்பை ஏற்படுத்தும் அனைத்திலிருந்தும் விலகி இருப்பதுதான் 'தக்வா' இறையச்சம் ஆகும்.

இறையச்சத்தின் அடையாளங்கள் முழு வாழ்வில் காணப்பட்டாலும் உண்மையில் அதன் வேர் உள்ளத்தி லிருந்தே உருவாகிறது. உள்ளத்தில் இறைவனுக்கு அடி பணிந்து வாழும் ஆர்வம், அவன் மீது நேசம், அவனுடைய சுவனத்தைக் கோரும் பிரார்த்தனை, 'அவனுடைய நெருப்பைப் பற்றிய அச்ச உணர்வு, அதிலிருந்து தப்பிப் பதற்கான துடிப்பு போன்றவை இருக்குமேயானால் அல்லாஹ்வின் கோபத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.



இக்காரணங்களினால் குர்ஆனும் இதன் பக்கமே சமிக்ஞை செய்கிறது. இறையச்சம் என்பது உண்மையில் உள்ளத்தின் இறையச்சமாகும். இறைத்தூதரிடத்தில் குரலைத் தாழ்த்திக் கொள்பவர்களைப் பற்றி குர்ஆன் கூறுகிறது.

எவர்கள் இறைத்தூதரின் திருமுன் தங்கள் குரலைத் தாழ்த்துகின்றார்களோ, உண்மையில் அத்தகையவர் களின் உள்ளங்களை இறையச்சத்திற்காக அல்லாஹ் பரிசோதித்து தேர்ந்தெடுத்திருக்கிறான். *(49:3)*

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீண்டதொரு நபிமொழியில், ஒரு முஸ்லிமுக்கு மற்ற முஸ்லிம்களிடமுள்ள உரிமைகளைக் கூறிக் கொண்டு வரும்போது, ''இறையச்சம் இங்கு உள்ளது'' என மூன்று முறை தம் நெஞ்சை நோக்கி சைகை செய்து இறையச்சம் இங்குதான் உள்ளது எனக் கூறினார்கள்.

இறையச்சத்தின் விரிவான கருத்தின் அடிப்படையே... அல்லாஹ் இருக்கிறான். அவனுக்கு வெறுப்பை உண் டாக்கும் எந்தச் செயலும் நடந்திடக் கூடாது எனும் நிலைதான். அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்கிற உள்ளுணர்வு எப்போதும் தொற்றிக் கொண் டிருக்க வேண்டும். எப்போதாவது அலட்சியமாய் இருந்து விடுவது வாழ்வில் நடக்கக் கூடியதுதான். எனினும் சுய நினைவு வந்தவுடன் உடனே இறைவனின் பக்கம் திரும்பி விட வேண்டும். நான் ஒரு காரியத்தை அல்லாஹ்வின் விருப்பத்திற்கு மாற்றமாகச் செய்து விட்டேன் என்கிற நினைப்போ அல்லது உணர்வோ வந்த உடனேயே அச்செயலிலிருந்து மீண்டு வருவது இறையச்சமாகும். ஒருவர் எந்நேரமும் தவறு செய்யாமல் இருக்கிறார் என்பது இறையச்சத்தின் பண்பாகாது. எப்போதேனும் தவறு நேர்ந்துவிட்டால் உடனே பழைய நிலைக்குத் திரும்புவதுதான் இறையச்சம் ஆகும்.

துரதிர்ஷ்டவசமாக இறையச்சம் பற்றிய இத்தகைய அடிப்படைகள் நம் பார்வையிலிருந்து அப்புறப்படுத்தப் பட்டு விட்டன. இறையச்சம் முழுவாழ்வையும் தழுவியது என்கிற கருத்தோட்டம் தேய்ந்து கொண்டே வந்து கடைசியில் சில வெளிப்படையான சடங்குகளாக வரை யறுக்கப்பட்டு விட்டன. உடை அலங்காரம், பழக்க வழக்கம், அசைவுகள்தான் இறையச்சம் என்றளவிற்கு இறையச்சத்தின் கருத்தோட்டம் வரையறுக்கப்பட்டு விட்டது.

## சமூக இறையச்சம்

நான் ''சமூக இறையச்சம்'' எனும் வார்த்தையினை தலைப்பாகத் தேர்ந்தெடுத்துள்ளேன். எனினும், இப்பெயர் குர்ஆன் மற்றும் நபிமொழியில் இடம்பெற்றிருக்க வில்லை. இது ஒரு புதிய வார்த்தைதான் புதிய வார்த்தை யினைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏதேனும் ஒரு நோக்கம் இருக்க வேண்டும். இறையச்ச வாழ்வில் சமூகக் கட்ட மைப்பின் வட்டத்தோடு தொடர்புடையவற்றைப் பற்றிப் பேசுவதுதான் என் நோக்கமாகும். ஏனெனில் பொதுவாக இது இறையச்சத்தின் எல்லையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கும் ஒரு வட்டமாகும். ஹலால், ஹராம் போன்றவற்றின் கருத்தோட்டத்திலும் நிறையவே வரையறுக்கப்பட்டிருப்பதுதான் இதற்குக் காரணம்.

நாம் ஹலால், ஹராம் என்ற வார்த்தைகளைச் சொன்னவுடன், ஹராம் என்பது வட்டி, மது, விபச்சாரம், தவறான செல்வம் போன்றவைதான் கவனத்தில் வருகின்றன. கொடுக்கல் வாங்கலில், மனித உறவில், உரிமைகளையும், கடமைகளையும் நிறைவேற்றுவதில் பல விஷயங்கள் ஹராமாக உள்ளன. தொழுகை, ஸகாத் கடமையிலும் பல விஷயங்கள் ஹராமாக உள்ளன.



கொலை செய்வது, உரிமைகளைப் பறிப்பது, பொறாமை கொள்வது போன்றவையும் ஹராமாக உள்ளன. எனினும், நமக்குள் இவை யாவும் மிகக் குறைவாகவே கவனத்தில் வருகின்றன. பன்றி இறைச்சியும் ஹராம்தான். அதே நேரத்தில் புறம் பேசுவது இறந்தவரின் இறைச்சியைத் தின்பது போன்றது என்பதால் ஹராம்தான்.

மதுவின் கோப்பையைப் பார்த்து விட்டால் நமக்குள் ஒருவித வெறுப்பும் கசப்பும் ஏற்படுகிறது. மதுவைக் கையில் எடுக்க வேண்டும், பன்றி இறைச்சியை உண்ண வேண்டும் என்று எந்த முஸ்லிமும் நினைக்கவும் மாட்டார்; பேசவும் மாட்டார். ஏனெனில் இவை யாவும் ஹரா மென்று நன்றாகவே தெரியும். இவற்றை குர்ஆனும் நபிமொழியும் தெளிவாக ஹராமென்றே அறிவித் துள்ளன. ஆனால் புறம் பேசுவதை நாம் இவ்வாறான ஹராமாகக் கருதுவதில்லை.

குர்ஆன் ஒன்றைச் செய்யாதீர்கள் எனக் கூறி யிருக்கும் போது அது ஹராம் ஆகி விடுகிறது. வட்டியைப் பற்றிக் கூறும் போது வட்டியை உண்ணாதீர்கள் என்றே கூறுகிறது. அதனாலேயே வட்டி ஹராம் ஆகிவிட்டது. மதுவைப் பற்றிக் கூறும்போது மதுவைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் எனச் சொன்னவுடன் மது ஹராம் ஆகிவிட்டது. விபச்சாரம் பற்றிக் கூறும்போது விபச் சாரத்தின் அருகில் கூட செல்லாதீர்கள் என்று கூறியதனால் விபச்சாரம் ஹராம் ஆகிவிட்டது. இவ்வாறே துருவி ஆராயதீர்கள், வீண் சந்தேகம் கொள்ளாதீர்கள், புறம் பேசாதீர்கள், யாரையும் பரிகாசம் செய்யாதீர்கள், விரும்பாத பட்டப் பெயரைச் சொல்லி அழைக்காதீர்கள், திட்டாதீர்கள்... இவை யாவும் குர்ஆனின் தொழுகைக் கான கட்டளையைப் போன்று, ஸகாத் கொடுக்க வேண்டும் என்கிற கட்டளையைப் போன்று திருடனின்

கையை வெட்ட வேண்டும் என்கிற கட்டளையைப் போன்று, மதுவிலிருந்து விலகியிருக்க வேண்டும் என்கிற கட்டளையைப் போன்று வட்டி உண்ணக் கூடாது என்கிற கட்டளையைப் போன்று ஒரே மாதிரியாகவே உள்ளன. இவற்றிற்கு மத்தியில் குர்ஆன் எவ்வித பாகுபாட்டையும் வைக்கவில்லை.

இவற்றினை நாம் கடினமான பணியாகக் கருதியதால் மெது மெதுவாக ஹராமின் வட்டத்திலிருந்து, தக்வாவின் வட்டத்திலிருந்து வெளியேறிக் கொண்டே போய்விட்டன. இன்று அல்லாஹ்வின் தீனுக்குக் கட்டுப்படும் ஒரு முஸ்லிம் மது அருந்த வேண்டும். பன்றி இறைச்சி உண்ண வேண்டும் என்று நினைப்பதில்லை. அதே நேரத்தில், புறம் பேசுவதில், பொய் உரைப்பதில், மற்றவரின் உரிமைகளைப் பறிப்பதில், உடன்படிக்கையை மீறுவதில், தீங்கு செய்வதில் வெட்கப்படுவதில்லை. மேற்கண்ட பாவங்கள் ஒருவரிடம் வளர்ந்து கொண்டிருக்கும் போது அவரின் மனசாட்சியில் சாதாரணமான உறுத்தல் கூட ஏற்படுவதில்லை. தக்வாவின் இவ்வம்சங்கள் யாவும் சமூக வாழ்வோடு தொடர்புடையவை. இதற்காகவே நான் 'சமூக இறையச்சம்' என்கிற தலைப்பை உபயோகித்து அதனைத் தெளிவுபடுத்த முயன்றுள்ளேன்.

தக்வாவைப் பற்றி எத்தனையோ அறிமுகங்கள் இருந்தாலும் அவற்றிலிருந்து முதன்மையான ஒன்றை குர்ஆன் நம் முன் வைக்கிறது என்பதை குர்ஆன் மூலமே அறிய முடிகிறது.

''நற்செயல் என்பது உங்களுடைய முகங்களை கிழக்கு நோக்கியோ மேற்கு நோக்கியோ திருப்புவதல்ல! மாறாக, அல்லாஹ்வையும் இறுதி நாளையும், வானவர்களையும், வேதங்களையும், நபிமார்களையும் ஒருவன்



முழுமையாக நம்புவதும் மேலும் (அல்லாஹ்வின் மீதுள்ள நேசத்தின் காரணமாக) தமக்கு விருப்பமான பொருளை உறவினர்களுக்கும், அநாதைகளுக்கும், வறியவர்களுக்கும், வழிப்போக்கர்களுக்கும், யாசிப்போருக்கும், அடிமைகளை மீட்பதற்கு வழங்குவதும், மேலும் தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தைக் கொடுத்து வருவதுமே நற்செயல்களாகும். மேலும் வாக்குறுதி அளித்தால் தம் வாக்குறுதிகளை நிறைவேற்றுபவர் வறுமை மற்றும் துன்பங்களின் போதும் சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் நடக்கும் போராட்டத்தின் போதும் பொறுமையுடன் நிலைத்து இருப்பவர்களுமே புண்ணியவான்கள் ஆவர். இவர்கள் தான் உண்மையாளர்கள்; மேலும், இவர்களே இறையச்சமுடையவர்கள்.'' *(அல்குர்ஆன் 2:177)*

குர்ஆன் திருமண விவாகரத்து சட்டங்கள், சொத்துரிமைச் சட்டங்கள், சமூக வாழ்க்கை தொடர்பான சட்டங்களைக் கூறும் போது அல்லாஹ்வின் தூதரை விட உங்களை முற்படுத்திக் கொள்ளாதீர்கள் என்றே கூறுகிறது. 'அல்லாஹ்விடம் அஞ்சுங்கள்', 'உங்கள் குரல்களை உயர்த்தாதீர்கள்' எனக் கூறி இருப்பதும் தக்வாவின் அடையாளம்தான். அவையில் அமர்ந்திருக்கும் போது பரவலாக அமருங்கள் என்றால் பரவலாக அமர வேண்டும். நெருக்கமாக அமருங்கள் என்றால் நெருக்கமாக அமர வேண்டும். 'எழுந்திருங்கள்' என்று கூறினால் எழ வேண்டும். இவை யாவும் சாதாரண செயல்கள் அல்ல. பெரும் நன்மையானவை. அதோடு கூட்டமைப்பின் ஒழுக்கங்களுடன் தொடர்புடையவை.

மக்கள் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடும் ஆட்சியாளர்களுக்கும் இதே விஷயம்தான் கூறப்பட்டுள்ளது. அரசின் அநீதிகளுக்கு எதிராக குர்ஆன் அனைத்து விஷயங்களையும் வெளிப்படையாகவே கூறியுள்ளது.

நபியாக இவ்வுலகில் வந்த ஒவ்வொருவரும் அல்லாஹ் விற்குக் கீழ்ப்படிந்து வாழுங்கள். 'அவனைத் தவிர வேறு இலாஹ் இல்லை' என்றே அழைப்பு விடுத்தார்கள். தொடர்ச்சியாக ஒவ்வொரு நபியின் அழைப்பையும் குர்ஆன் தன்னுள் பதித்து வைத்துள்ளது. 'அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள் மேலும் எனக்குக் கீழ்ப்படியுங்கள்' *(அல்குர்ஆன் 3:50)* வேதத்திலிருந்து பயன் பெறுவதற்கு தக்வா இன்றியமையாத கட்டாயம் என்பதைக் குர்ஆன் தெளிவுபடுத்தியது.

## சமூக இறையச்சத்தின் முக்கியத்துவம்

சமூகக் கூட்டமைப்பின் பல்வேறு அம்சங்களைத் தனித்தனியாக வகைப்படுத்தி விடலாம். அதில் ஒன்று மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்புகளும், கொடுக்கல் வாங்கலுமாகும். ஒரு கணம் சிந்தித்துப் பார்த்தால் இதன் வரையறைக்குள் வாழ்வின் பெரும்பாலான பகுதிகள் வந்துவிடும் அளவிற்கு விசாலமானது. தாய், தந்தை, சகோதர, சகோதரி, உறவினர்கள், முஹல்லா வாசிகள், வியாபார நண்பர்கள் அனைவரும் இதற்குள் வந்துவிடுகிறார்கள். தன்னுடைய பொறுப்புகளுடன் தொடர்புடையவர்கள் ஆட்சியாளர்களாக இருந்தாலும், முதலாளிகளாக இருந்தாலும், அமைப்பின் தலைவர்களாக இருந்தாலும் தங்களுக்குக் கீழ் பணிபுரிவர்களாக இருந்தாலும் அல்லது முழுக் கூட்டமைப்புடன் இருக்கின்ற தொடர்பானாலும் இவை யாவும் சமூக இறையச்சத்தின் வட்டத்திற்குள் வந்துவிடுகின்றன. இவற்றைக் குறித்துதான் அல்லாஹ்விடம் பதிலளிக்க வேண்டியுள்ளது. கேள்வி வட்டத்திற்குள் வரும் சமூக இறையச்சம் நுட்பமான விஷயமாகும்.

ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கும் நபிமொழி ஒன்றில் காணப்படுகிறது:



''அல்லாஹ்விடம் அமல்களின் மூன்று விதமான பட்டியல் இருக்கும். ஒன்று, அல்லாஹ் எப்போதும் அதனை மன்னிக்கவே மாட்டான். இரண்டாவது, அல்லாஹ் அதனைப் பொருட்படுத்த மாட்டான். மூன்றாவது அல்லாஹ் அதனைக் கணக்கு வாங்காமல் விட மாட்டான்.''

''முதலாவது பட்டியல்தான் இணைவைப்பு தொடர்பானது. இணை வைப்பு மன்னிக்கப்படாத ஒன்று. இரண்டாவது பட்டியலில் இருப்பவை மனிதன் தன் மீதே இழைத்துக் கொண்ட அநீதிகளைப் பற்றியது. அதன் தொடர்பு ஒன்று அம்மனிதனோடு இருக்கும் அல்லது அல்லாஹ் வோடு இருக்கும். உதாரணமாக, தொழுகை விடப்பட்டிருக்கலாம். அல்லது அதில் குறைகள் இருக்கலாம். இவ்வாறான பட்டியலை அல்லாஹ் பொருட்படுத்த மாட்டான். விரும்பினால் அனைத்தையும் மன்னித்து விடுவான். அல்லது இதற்கும் கணக்கு வாங்குவான். மூன்றாவது பட்டியல் மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல் தொடர்பானது. சமூக விவகாரங்கள் தொடர்பானது. இந்தப் பட்டியல் குறித்து கண்டிப்பாய் கணக்கு வாங்கப்படும்.'' இதன் மூலம் சமூக இறையச்சத்தின் விவகாரம் இம்மையுடனும் மறுமையின் நஜாத்துடனும் தொடர்புடையது எனத் தெரிகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தம்முடைய தோழர்களுக்கு ஒன்றை விளங்கிக் கொள்ளும் வகையில் உதாரணத்தோடு கூறி வந்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒரு முறை தோழர்களிடம் சிறந்ததொரு உதாரணத்தை முன்வைத்து கேட்டார்கள். 'முஃப்லிஸ் - வறியவன் என்பவன் யார்?' தோழர்கள் கூறினார்கள்: ''எவரிடம்

காசு, பணம், உலகச் செல்வங்கள் இல்லையோ அவரையே முஃப்லிஸ் என நினைக்கிறோம்.'' நபியவர்கள் கூறினார்கள்: ''இல்லை... என்னுடைய உம்மத்தில் முஃப்லிஸ் என்பவர் மறுமை நாளில் தொழுகை, நோன்பு, தர்மங்கள் போன்ற நிறைய நன்மைகளைக் கொண்டு வருவார். அதே நேரத்தில் உலகில் யாரையேனும் திட்டி இருப்பார். யாரையாவது அவதூறு கூறியிருப்பார். சிலரைத் துன்புறுத்தியிருப்பார். மற்றவர்களின் பொருளை விழுங்கி இருப்பார். மற்றவர்களின் உரிமையைப் பறித்திருப்பார். இவர் மூலமாக பாதிக்கப்பட்டவர்கள் அனைவருக்கும் இவருடைய நன்மைகள் எடுத்து வழங்கப்படும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மறுமையின் முழுக் காட்சியினைக் கொண்டு வந்து விட்டார்கள். இழப்பிற்குரியவர்களுக்கு நன்மைகள் அனைத்தும் பிரித்துக் கொடுக்கப்படும். அங்கு நல்லமல்களைத் தவிர பணம் பயன்படப் போவதில்லை. அவரின் நன்மைகள் அனைத்தும் பங்கிடப்பட்டு தீர்ந்து போன பிறகு அவர்களின் பாவங்களும் குற்றங்களும் அவரின் மீது சுமத்தப்படும். இறுதியாக அவர் நரகில் தூக்கி வீசப்படுவார்.

இன்னொரு நபிமொழியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இதைவிட அழுத்தமாகக் கூறியுள்ளார்கள். ''ஒருவர் தன் அமல்களைப் பார்வையிடும்போது 'நஜாத்' ஈடேற்றம் பெற்று விட்டதாக எண்ணிக் கொள்வார். இவரைப் பற்றிய புகார்களை முறையிடுபவர்கள் ஒவ்வொரு புகாராக முன்வைக்கும் போது அதற்கான பரிகாரம் காணப்படும். இறுதியில் நன்மைகளின் ஒட்டுமொத்த குவியல்களும் மற்றவர்களுக்குச் சென்றுவிடும். மறுமையில் நஜாத் பெறுவதற்காக அவரிடம் ஒன்றும் இருக்காது.'' மறுமையில்



இவ்வாறான செயல்களுக்குத்தான் மிகுந்த முக்கியத்துவம் இருக்கும். மறுமையில் வேறு எந்த இபாதத்தும் மாற்றாக வர முடியாது. எனவேதான் தீனில் இதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் இரண்டு பெண்களைப் பற்றிக் கேட்கப்பட்டது. ''ஒரு பெண் சிறந்த தொழுகையாளி; தர்மம் செய்பவள்; நோன்பு நோற்பவள்; இருந்தும் அப்பெண்ணின் தீய வார்த்தைகளால் அண்டை வீட்டார் அவதிக்கு உள்ளாகிறார்கள். அப்பெண்ணின் நிலை என்ன?'' நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: ''அவள் நரகிற்குச் செல்வாள்.''

இன்னொரு பெண்ணைப் பற்றிக் கூறினார்கள். ''கடமையான தொழுகையினை நிறைவேற்றி விடுவார். சாதாரண பொருள்களையே தர்மம் செய்வாள். ரமழானில் நோன்பு வைப்பாள். வேறு குறிப்பிடும்படியான இபாதத்துகள் செய்வதில்லை. அப்பெண்ணின் இனிமையான பேச்சால் அண்டை வீட்டார் மிக்க மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள்.'' அதற்கு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். ''அப்பெண் சுவனத்திற்குச் செல்வாள்.''

நபிமொழியில் வந்துள்ள சம்பவம் இது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சபைக்கு ஒருவர் வந்தார். பிறகு சென்று விட்டார். நபியவர்கள் ''எவரேனும் சுவனவாசியைக் காண விரும்பினால் அவரைப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்கள். அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் இதைக் கேட்டவுடன் அவரிடம் சுவனத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் செயல் என்னதான் உள்ளது எனப் பார்க்க விரும்பும்

ஆவல் ஏற்பட்டு விட்டது. ஏதோ ஒரு சாக்கை வைத்துக் கொண்டு அந்த மனிதரின் வீட்டிற்குச் சென்றார். என்னுடைய வீட்டில் சண்டை நடந்து விட்டது. எனவே உங்களுடன் சில நாள்கள் தங்கியிருக்க விரும்புகிறேன்'' என்றார்.

''தாராளமாக இருங்கள்'' என்று அவரும் கூறி விட்டார். இவரும் அவருடைய வீட்டில் தங்கி விட்டார். இரவு வந்தது. இரவு முழுக்க தூங்கிய வீட்டுக்காரர் தஹஜ்ஜுத் கூடத் தொழவில்லை. தஹஜ்ஜுத் தொழாதவர் எப்படி சுவனம் புக முடியும் என்கிற ஆச்சரியம் ஏற்பட்டது. பகல் முழுவதும் அவரின் அமல்களையும் கவனித்து வந்தார். எனினும் குறிப்பிடும்படியான எந்த அமலும் இவருக்குத் தென்படவில்லை. மூன்று நாள்களுக்குப் பின் அவரிடம் விடை பெறச் சென்றார். 'சுவனவாசியைப் பார்க்க விரும்புபவர் அவரைப் பார்த்துக் கொள்ளட்டும்' என உங்களைப் பற்றிக் கூறியதாலேயே இங்கு வந்தேன். ''நான் உங்களிடம் எவ்விதச் சிறப்பையும் காணவில்லை'' என்றார். அதற்கவர், ''நீங்கள் என்ன பார்த்தீர்களோ அதனையே நான் செய்து வருகிறேன். நான் என் உள்ளத்தில் எந்த ஒரு முஸ்லிமைப் பற்றியும் வெறுப்போ பகையோ கொள்வதில்லை; அவ்வளவுதான்'' என்றார். ''இதுதான் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உங்களை சுவனவாசி என முன்னறிவிப்பு செய்ததற்குக் காரணம்'' என்றார் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள். இச்சம்பவத்திலிருந்து ஒரு முஸ்லிமைப் பற்றி வெறுப்போ பகையோ கொள்ளாமல் இருப்பது எத்தகைய மதிப்பு மிக்கது என அறிந்து கொள்ள முடியும்.



## அடிப்படைக் கொள்கை நெறி
## துன்பம் அளிப்பதைத் தவிர்த்தல்

மனிதனுக்குத் தொல்லை அளிப்பதை விட்டும் இன்னும் படைப்பினங்களுக்குத் தொல்லை அளிப்பதை விட்டும் ஒருவர் தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். விலங்கினம், பறவையினம், தாவர இனம் அனைத்தும் படைப்பினங்கள்தான். சமூக இறையச்சத்தின் அடிப்படைக் கொள்கை நெறியே மற்றவர்களுக்குத் தொல்லை தரக் கூடாது என்பதுதான். முழு ஷரீஅத்தின் அடிப்படையும் இதுதான்.

நிக்காஹ் மற்றும் தலாக்கின் வழிமுறைகள், சொத்துரிமைச் சட்டங்கள், அரசியல் சட்டங்கள், இன்னும் ஷரிஅத்தின் வரையறைகள் அனைத்திற்கும் மையமாக இருப்பது ஒருவர் மற்றவருக்குத் தொல்லை அளிக்கக் கூடாது என்பதுதான்.

ஒருவர் மற்றவர் வீட்டிற்குள் நுழைய வேண்டுமானால் அனுமதி பெற்று நுழைய வேண்டும். அனுமதியின்றி நுழைந்தால் வீட்டுச் சொந்தக்காரருக்குத் தொல்லையும் சிரமமும் ஏற்படும். மூன்று பேர் இருக்கும் இடத்தில் இருவர் மட்டும் பேசிக் கொண்டிருந்தால் மூன்றாமவருக்கு வருத்தம் ஏற்படும். இவை யாவும் சிறு சிறு சட்டங்கள்தான். சிறிய சட்டங்களானாலும் பெரிய சட்டங்களானாலும் அடிப்படைக் கொள்கை நெறி ஒன்றுதான். ஒருவர் மற்றவருக்குத் தொல்லை அளிப் பதைத் தவிர்த்துக் கொள்வதுதான் மிகச் சிறந்த ஒழுக்கம் என பெரும்பாலான அறிஞர்கள் கூறியுள்ளார்கள்.

மௌலானா அஷ்ரஃப் அலி தானவி அவர்களின் இரண்டு வரிகளை எடுத்துக் கொண்டாலே ஷரிஅத்தின்

முழுப் பொருளும் வந்து விடும். ஒன்று... எப்பணியைப் செய்தாலும் தூய்மையாக அல்லாஹ்வின் திருப்திக் காகவே செய்ய வேண்டும். இரண்டு, எந்த அடியா னுக்கும், எந்தப் படைப்பினத்துக்கும் துன்பங்களோ தொல்லைகளோ தரக்கூடாது. மற்றவர்களுக்கு தொல்லை தரும் பேச்சைப் பேசாதீர்கள்; தொல்லை தரும் காரி யத்தைச் செய்யாதீர்கள். இவ்விரண்டு அடிப்படைகளை மட்டுமே தேர்வு செய்து கொண்டு செயல்பட்டாலும் முழு ஷரிஅத்தும் இதற்குள் வந்துவிடும்.

நபி வரலாறிலும், நபிமொழியிலும் எண்ணற்ற சம்பவங்கள் மண்டிக் கிடக்கின்றன. நபியவர்கள் அருளினார்கள்: ''ஒருவர் குறைந்த பட்சம் நன்மையான பாதையைத் தெரிந்து கொள்ள வேண்டும். மற்றவர் களுக்கும் செலவு செய்ய வேண்டும். ஏழைகளுக்கு பணி விடை செய்ய வேண்டும். உழைத்து அதன் மூலம் வரும் செல்வத்தைச் செலவழிக்க வேண்டும். பலன் தரும் பேச்சு களைப் பேச வேண்டும்.'' அங்கிருந்தவர்கள் வினவி னார்கள்: ''இதுவும் செய்ய முடியவில்லை எனில் என்ன செய்வது?'' நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''மற்றவர்களுக்குத் தொல்லை அளிப்பதை தன் புறத்தி லிருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும்'' என அருளினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒருமுறை: ''முஸ்லிம்களில் ஒருவருக்கு எவரேனும் துன்பம் அளித்தால் அவர் எனக்குத் தொல்லை அளித்தவர் ஆவார். எனக்குத் தொல்லை அளித்தவர் அல்லாஹ்வுக்குத் தொல்லை அளித்தவர் ஆவார். இவ்வாறாக, அடியானின் விவகாரம் அல்லாஹ்வுடன் தொடர்புள்ளதாக இருக் கிறது. எவருடைய நாவினால், கரத்தால் மற்ற முஸ்லிம்கள் பாதுகாப்பு பெறுகிறார்களோ, எவரிடம் தங்களுடைய



விவகாரங்களை ஒப்படைத்து விட்டு முஸ்லிம்கள் நிம்மதி யுடன் இருக்கிறார்களோ அவர்கள்தான் முஸ்லிம்கள்'' என முஸ்லிம் யார் என்பதற்கு விளக்கமாகக் கூறினார்கள்.

''ஒரு முஸ்லிமுக்கு இன்னொரு முஸ்லிமின் இரத்தம் ஹராம் ஆகும். அவரை இழிவுபடுத்துவதும் ஹராம் ஆகும். அவருடைய செல்வம் இவருக்கு ஹராம் ஆகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள். ஹராமில் கவுரவம், செல்வம், உடல், உயிர் அனைத்தும் உள்ளடங்கி விட்டதால் ஹராமின் வட்டம் விரிந்து விட்டது. அந்தோ... நாமோ ஹராமின் கருத்தோட்டத்தைச் சுருக்கி வைத்து விட்டோம். உண்ணு வதிலும் பருகுவதிலும் இன்னும் இவை போன்ற விஷயங் களில்தான் ஹராம் உள்ளது என நினைத்துக் கொண் டிருக்கிறோம். அல்லாஹ்வும் ரசூலும் கூறுகிறார்கள்: முஸ்லிமின் ரத்தமும் ஹராம்தான்; கண்ணியமும் ஹராம் தான்; செல்வமும் ஹராம்தான். இவைதான் தக்வாவை உரு வாக்கும் அடிப்படையான கொள்கை நெறியாகும்.

## அநீதி அக்கிரமத்தை விட்டு விடல்

தக்வாவைக் குறித்து நிறைய சட்டங்கள் உள்ளன. இங்கு அவற்றையெல்லாம் கூற வேண்டியதில்லை. குர்ஆனிலும் நபிமொழிகளிலும் பல்வேறு இடங்களில் தெளிவாகவும் சில இடங்களில் நேரடியாகவும் இன்னும் சில இடங்களில் ஜாடையாகத் தெளிவுபடுத்தப்பட் டுள்ளன. ஓர் அடிப்படையான கொள்கை நெறி கிடைப் பதே போதுமானது. சிந்தித்துப் பார்த்தால் நிக்காஹ் மற்றும் தலாக் சட்டங்களின் போதும் அல்லாஹ் ஒவ்வோர் இடத்திலும் கணவன் மூலம் மனைவிக்கோ அல்லது மனைவி மூலம் கணவனுக்கோ தொல்லை ஏற்படக் கூடாது என்றே கூறி வருகிறான்.

சொத்து பிரிக்கும் சட்டத்திலும் கூட ஒருவரின் உரிமையைப் பறிக்கும் அல்லது ஒருவருக்குத் தொல்லை தரும் வகையில் எதுவும் நடைபெறக் கூடாது என்றே கூறிவருகிறான். தீங்கை அழிக்க வேண்டும்; உரிமை மீறலை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். மனித உறவு களில் தொல்லை என்பதையே இல்லாமல் ஆக்க வேண்டும். என்பதுதான் அத்தனை சட்டங்களின் மையமாக உள்ளது. வேறு வார்த்தைகளில் தொல்லை என்பது அநீதி என்று கூறப்படுகின்றது.

எனவே சமூக இறையச்சம் என்பதன் பொருள், மனிதன் அநீதியிலிருந்தும் தொல்லைகளிலிருந்தும் பாது காக்கப்பட வேண்டும் என்பதுதான். 'அநீதி' என்பது குறிப்பாகவும் மிக விரிவான பொருளிலும் கையாளப் பட்டுள்ளது.

அநீதிக்கு நிறைய முகங்கள் உண்டு. இணை வைப்பும் ஓர் அநீதிதான்.

''நிச்சயமாக இணை வைப்பது மாபெரும் அநீதியாக உள்ளது.'' *(அல்குர்ஆன் 31:13)*

மனிதர்களால் ஏற்படும் அநீதியைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான்: நான் அநீதி இழைப்பதை என் மீது ஹராமாக்கிக் கொண்டேன். எனவே நீங்களும் உங்க ளுக்குள் அநீதி இழைத்துக் கொள்ளாதீர்கள். அநீதியின் காரணமாக கியாமத் நாளில் இருள் சூழ்ந்து கொள்ளும். அப்போது ஈடேற்றம் பெறுவதற்கான வழியே இருக்காது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஆளுநராக நியமித்து அனுப்புபவரிடம் முஸ்லிம்களின் உரிமைகளைப் பற்றி அறிவுரை கூறி அனுப்புவார்கள். ''அநீதி இழைக்கப்பட்டவரின் துஆவிற்கும் இறைவனுக்கும் எந்தவித தடையும் இருப்பதில்லை.''



வேறொரு நபிமொழியில் ''அநீதி இழைக்கப் பட்டவர் பாவியாக இருந்தாலும் அவரின் துஆ அவசியம் ஏற்கப்படும்'' என்று கூறப்பட்டுள்ளது. அவரின் பாவம் அவரின் பொறுப்பில் அவரோடு உள்ளது. நீங்கள் செய்த அநீதி உங்களின் பொறுப்பில் உள்ளது. இன்னொன் றையும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: ''அவர் நிராகரிப்பாளராக இருந்தாலும் சரியே!'' நிராகரிப்பாளராக இருந்தாலும் அநீதி இழைக் கப்பட்டவரின் முறையீடு இறைவனின் அர்ஷ் வரை சென்றடையும். எனவே அநீதிக்கு ஆளானோரின் சாபத் திலிருந்து விலகி இருக்க வேண்டும்.

## பிராணிகள் விஷயத்திலும் தக்வா

அநீதியின் பட்டியல் மனிதர்களோடு முடிந்து போவதில்லை. எல்லாப் படைப்பினங்கள் வரை விரிந்து செல்கிறது. எவரிடமும் வரம்பு மீறக் கூடாது. வரம்பு மீறுவதை நினைத்துப் பார்க்கவும் கூடாது. சமூக இறையச்சம் தொடர்பான இஸ்லாமிய போதனைகள் எவ்வளவு நுட்பமானது என்பதை உணர்த்தவே விலங்கு களைப் பற்றி இங்கு கூறுகிறேன். ''பிராணிகள் பேசு வதில்லை. எனினும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், பிராணிகள் விஷயத்தில் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ள வேண்டும்'' எனக் கூறியுள்ளார்கள்.

ஒருவர் ஒரு பிராணியை கீழே கிடத்தி விட்டு தன்னுடைய கத்தியைத் தீட்ட ஆரம்பித்து விட்டார். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி னார்கள்: ''அதற்கு இரண்டு மரணத்தை ஏன் கொடுக் கிறீர்கள்?'' அப்பிராணியோ அறுக்கப்படவுள்ளது. இறக் கத்தான் போகிறது. இந்நிலையில் அதன் கண் முன்னே கத்தி தீட்டப்படுவதைப் பார்த்து திகிலடைந்து போகிறது.

கத்தியை முன்பே தீட்டிக் கொண்டு அதன் பின் பிராணியைக் கிடத்தலாம்.

"ஒரு பெண் பூனையைக் கட்டிப் போட்டு விடுவாள். அதற்கு உணவும் கொடுக்க மாட்டாள். வெளியே போய் உணவு தேட கட்டவிழ்த்து விடவும் மாட்டாள். அப்பூனை இறந்து விட்டது. நான் அப்பெண்ணை மிஃராஜின் நேரத்தில் பார்த்தேன். அப்பூனையைப் பசியோடு கட்டிப் போட்டு கொன்றதால் நரகத்தில் இருந்தாள்" என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். இதைத் தவிர ஒட்டகங்கள், பிராணிகள், பறவைகள் குறித்தும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவுரை கூறியுள்ளார்கள்.

ஒருவர் குருவியின் குஞ்சை அதன் கூட்டிலிருந்து எடுத்துக் கொண்டார். குருவி துடித்துப் போய் விட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அதனை விட்டு விடும்படி கூறினார்கள். உயிரினங்கள் விஷயத்திலும் பழிக்குப் பழி உண்டு என்றார்கள். 'பறவைக்கு துன்பம் தந்தால் அது இம்மனிதர் என்னை வீணாகக் கொன்று விட்டார்' என முறையிடும். பிராணிகளை மோதவிட்டு வேடிக்கை பார்த்த காலம் அது. பிராணிகளைக் கட்டிப் போட்டு குறி பார்த்து அம்பு எய்வார்கள். இவற்றையெல்லாம் பொழுதுபோக்கு என்பார்கள். பிராணிகளைக் கொடுமைப்படுத்துவதை அல்லாஹ் சபிக்கிறான் என்பதால் இவ்வகை வேடிக்கைகள் அனைத்தையும் நபியவர்கள் தடை செய்து விட்டார்கள்.

அன்சாரித் தோழரின் தோட்டத்திற்கு ஒரு முறை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சென்றிருந்தார்கள். அப்போது ஒரு ஒட்டகம் நபி அருகில் வந்தது. அதன் வயிறு உணவு இல்லாமல் முதுகோடு ஒட்டிப் போய்



இருந்தது. அதன் கண்களில் நீர் வடிந்தவாறு இருந்தது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோழரைப் பார்த்து, "அதற்கு உணவளிக்காமல் நிறைய வேலை வாங்கியதாக அது உங்களைப் பற்றி என்னிடம் புகார் கூறியது. உங்கள் பிராணிகளுக்கும் உங்கள் மீது உரிமை உள்ளது" என்றார்கள்.

முற்காலத்தில் நபி ஒருவரை ஒரு எறும்பு கடித்து விட்டது. உடனே அவர் எறும்புப் புற்றுக்கு நெருப்பு வைத்து விட்டார். அதற்கு அல்லாஹ் அவரிடம், "ஒரு எறும்பு கடித்ததற்காக நீங்கள் தவறிழைக்காத அனைத்து எறும்புகளையும் நெருப்பில் போட்டு விட்டீர்களே" என்று கேட்டான். (புகாரி) பழி வாங்கும் போதும் அநீதியிலிருந்து ஒதுங்கியிருக்க வேண்டும் என்பதற்கு குர்ஆனிலும் நபிமொழிகளிலும் அளப்பெரிய முன்னெச்சரிக்கைகள் இடம்பெற்றுள்ளன.

பிராணிகள், பறவைகள், எறும்புகள் போன்றவற்றிற்கே இந்தளவு முக்கியத்துவம் கொடுத்துள்ள தீனும் ஷரிஅத்தும் மனிதனுக்கு எந்தளவு உயர்ந்த அந்தஸ்தைக் கொடுத்திருக்கும்.

## மனித உயிருக்கு கண்ணியம்

மனித உயிர்தான் அனைத்தையும் விட முக்கியத்துவம் வாய்ந்தது. ஒருவர் ஒரு முஸ்லிமைக் கொலை செய்து விட்டால் அவருக்கு நிரந்தரமாக நரகம் உள்ளது என குர்ஆன் குறிப்பிடுகிறது. அவருக்கு வேறு எந்த விடுதலையும் பாதுகாப்பும் கிடைக்காது. கொலைக்குப் பழியாக இல்லாமல், பூமியில் குழப்பம் விளைவித்ததற்கு தண்டனையாகவும் இல்லாமல் நியாயமின்றி ஒருவரைக் கொலை செய்துவிட்டால் அவர் அனைத்து மனித சமூகத்தையே கொன்று விட்டவர் போலாவார். *(அல்குர்ஆன் 5:32)*

மனித உயிருக்கு கண்ணியம் அளித்திருப்பது போலவே மனித உடலை சித்ரவதை செய்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. மனித வதைக்கு ஆங்கில மொழியில் இன்று பயன்படுத்தப்படும் வார்த்தை 'டார்ச்சர்' என்பதே. பல நாடுகளும், பல அரசுகளும் இவ்வார்த்தையை உபயோகிக்கின்றன. மனிதனை டார்ச்சர் செய்து அவனுடைய குற்றத்தை ஒப்புக் கொள்ள முயற்சி செய்யக் கூடாது. அரசு தன் பணியைச் சாதித்துக் கொள்வதற்காகவும் சித்ரவதை செய்யக் கூடாது. எதிர்க் கருத்து உள்ளவர் என்பதனாலும் தொல்லை தரக் கூடாது.

கிலாஃபத் ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, ஒரு சிலர் வெய்யிலில் நிற்க வைக்கப்பட்டிருந்தார்கள். அவ்வழியாகச் சென்ற நபித்தோழர் ஒருவர், ''இவர்கள் ஏன் வெய்யிலில் நிற்க வைக்கப்பட்டிருக்கிறார்கள்?'' என்று வினவினார். ''இவர்கள் வரி கொடுக்கவில்லை. ஆகையால்தான் வெய்யிலில் நிற்க வைக்கப்பட்டுள் ளனர்'' என பதில் கிடைத்தது. அதற்கு அந்த நபித்தோழர் கூறினார்: ''அடியார்களுக்கு தண்டனை கொடுப்பவர் களுக்கு அல்லாஹ் தண்டனை கொடுப்பான் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருந் ததை நான் கேட்டேன்'' என்றார். உடலை வாட்டி வதைக்கும் விதமாக தண்டிப்பது தடை செய்யப் பட்டுள்ளது. உயிருக்கு கண்ணியம் அளிக்க வேண்டும் என்பதுதான் இதன் நோக்கமாகும்.

மற்றவர்களுக்கு துன்பம் ஏற்படும்படி கேலி செய்வதும் கூடாது என நபியவர்கள் தடை செய்துள் ளார்கள். ஒருவரின் செருப்பை அல்லது ஆயுதத்தை மறைத்து வைத்து விடுவது. இருவருக்கும் நட்பு நன்றாக உள்ள நிலையில் இதனைத் தவறு என்று சொல்ல முடியாது. இச்செயல் ஒருவருக்குப் பிடிக்காத செயலாக



இருக்கக் கூடாதுதான். இவற்றை எல்லாம் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தடுத்துள்ளார்கள். எச்சரிக்கை நிறைந்த எண்ணற்ற சம்பவங்கள் நபிமொழி களில் மண்டிக் கிடக்கின்றன. கத்தி அல்லது ஆயுதம் கொண்டு மிரட்டுவதையும் ''முஸ்லிம்களை அச்சுறுத் தாதீர்கள்; பயமுறுத்தாதீர்கள்'' என இறைத்தூதர் கூறி யுள்ளார்கள். இவை யாவும் உடல், உயிர் பாதுகாப்பு தொடர்பானவை. முஸ்லிமின் வாயிலிருந்தும் கரத்தி லிருந்தும் மற்ற முஸ்லிம்களின் உடைமைகள் பாது காக்கப்பட வேண்டும். முஸ்லிமின் உயிரும், பொருளும், மானம் மரியாதையும் கண்டிப்பாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

## மானம் மரியாதைக்குப் பாதுகாப்பு

அனைத்தையும் விட முதன்மையானது மானம், மரியாதைதான். மரியாதை கெடுப்பது ஒவ்வொரு வருக்கும் ஹராம் ஆக்கப்பட்டுள்ளது. மானம் ஒரு மனிதனுக்குக் குருதியை விட அதிக மதிப்புள்ளதாகும். மானம் போய்விட்டது என்பதற்காக மனிதன் தன் உயிரையும் விட்டு விடுவான். முஸ்லிமின் மானத்திற்கு எவ்வழியாக அவமதிப்பு வந்தாலும்... புறம் பேசுவதன் மூலம், நையாண்டி செய்வதன் மூலம், சந்தேகப்படுவதன் மூலம், குறைகாணத் திரிவதன் மூலம், உறவை சீர்கெடுப்பதன் மூலம் இவ்வனைத்து செயல்களைப் பற்றியும் நபிமொழிகளில் கடும் எச்சரிக்கையும் அச்ச மூட்டலும் வந்துள்ளன. இந்த அளவிற்கு வேறு எந்தச் செயல்களுக்கும் எச்சரிக்கை வரவில்லை.

புறம் பேசுவது விபச்சாரத்தை விடவும் கீழான குற்றம் எனக் கூறப்பட்டுள்ளது. ஒருவர் இல்லாத போது, அவரைப் பற்றி குறை சொல்வது அல்லது அவருக்குப்

பிடிக்காதவற்றைப் பேசுவது புறம் பேசுவதாகும். இப்போது நமது சமுதாயத்தில் இவை சர்வ சாதாரணமாக நடந்து வருகிறது. மது அருந்துவதையும் வட்டி உண்ணுவதையும் தீங்காகக் கருதும் மக்கள் முஸ்லிம்களின் இறைச்சியை கொஞ்சமும் அருவெறுப்பில்லாமல் நிம்மதியாகச் சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோள் சொல்வது, மற்றவர்களின் சொந்த விஷயங்களை வெளியில் பரப்புவது, மக்களின் குறைகளைத் தேடிக் கொண்டு திரிவது இவை யாவும் அதிகமாகவே காணக் கிடைக்கின்றன. மற்றவர்களின் குறைகளை மிகைப்படுத்துவதற்கும், கேவலப்படுத்துவதற்கும் கடும் தடை உள்ளது. அதே நேரத்தில் மற்றவர்களின் குறைகளை மறைக்க வேண்டும் என்கிற கட்டளையும் உள்ளது. சாடை மடையாக ஒருவரின் மானத்தைப் போக்குவதற்கும் குர்ஆன் கண்டனம் தெரிவிக்கிறது.

''(மக்களை நேருக்கு நேர்) இழித்துரைத்துக் கொண்டும் (முதுகுக்குப் பின்) குறை கூறிக் கொண்டும் திரிகின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் கேடுதான்.'' *(அல்குர்ஆன் 104:1)*

முஸ்லிம்களை இழிவுபடுத்தியிருப்பது ஒன்றே ஒருவர் தீயவர் என்பதற்குப் போதுமான சான்றாகும். 'முஸ்லிம்' நூலில் பிரபல்யமான நபிமொழியில் 'முஸ்லிம் முஸ்லிமின் சகோதரன்' என்று சொல்லப்பட்டுள்ளது. முஸ்லிம் மீது அநீதி இழைக்கக் கூடாது. அவரை ஆதரவற்றவராக விட்டு விடக் கூடாது. எந்த இடத்திலும் அவரை இழிவு படுத்தக் கூடாது. கேவலமானவர் என்றும் கருதக் கூடாது. நபிமொழியில் 'இறையச்சம் இங்குள்ளது' என நெஞ்சைக் காட்டி கூறப்பட்டுள்ளது. முஸ்லிம்களை ஒருவர் தன் உள்ளத்தில் கேவலமாக நினைத்து வந்தால் அவ்வுள்



ளத்தில் இறையச்சம் தங்கியிருக்க முடியாது. முஸ்லிம்களுக்கு மதிப்பளிக்க வேண்டும். முஸ்லிம்களுடன் கண்ணியமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதன் பொருள்தான் 'தக்வா.'

## செல்வம் பொருளின் கண்ணியம்

இதற்கு அடுத்து பொருளின் கண்ணியம் இடம் பெறுகிறது. ஒரு முஸ்லிமின் பொருள் மற்ற முஸ்லிமுக்கு ஹராம் ஆகும். ரமழான் மாதத்திற்குரிய கட்டளை பிறப்பிக்கப்பட்ட போது... ஒருவர் வைகறையிலிருந்து மாலை வரை உண்ணுவதையும் பருகுவதையும் தடுத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறிவிட்டு அல்லாஹ் நீங்கள் ஒருவர் மற்றவரின் பொருள்களைத் தவறான முறையில் உண்ணாதீர்கள்.'' *(2:188)* என்கிறான்.

நோன்பு... பகலிலும் ஹலாலான பொருள்களை உண்ணுவதை விட்டும் தடுத்து விடுகிறது. இறையச்சம் ஏற்படுவதற்கான வழிமுறை இது. இதன் இயல்பான நோக்கம் என்னவெனில் தவறான வழியில் ஒருவர் இன்னொருவரின் பொருளை உண்ணக் கூடாது என்பது தான். பொய் சத்தியம் செய்து ஒருவரின் பொருளை அபகரித்துக் கொண்டால் அவர் மீது அல்லாஹ் சுவனத்தை ஹராமாக்கி விடுகிறான் என நபிகளார் கூறியபோது ஒருவர் கேட்டார்: ''அது அற்பமான பொருளாய் இருந்தால்...''

ஆமாம் அது மரத்தின் கிளையாகவோ கிளையின் ஒரு பகுதியாகவோ இருந்தாலும் சரியே'' என்றார்கள். இன்னொரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: எவரேனும் பொய் சத்தியம் செய்து ஒருவருடைய உரிமையைப் பறித்துக் கொண்டால் நிலத்தை அபகரித்துக் கொண்டால்

அந்நிலம் நெருப்பின் நுகத்தடியாக ஆக்கப்பட்டு அவரின் கழுத்தில் போடப்படும். ஒருவருக்குச் சொந்தமில்லாத பொருளை, மற்றவருக்குச் சொந்தமான பொருளை உண்ணுவதும் சொந்தமாக்குவதும் அனுமதியற்றதாகும். இவை அனைத்தும் சமூக இறையச்சத்தின் ஒரு பகுதி யாகும்.

பரஸ்பர உறவின் ஒவ்வொரு நகர்விலும் இவ்வாறே இறையச்சம் பற்றி அறிவுறுத்தப்பட்டுள்ளது. சற்று சிந்தித்துப் பார்த்தால் அல்லாஹ்வின் எந்தச் சட்டமும் இறையச்சத்தின் வரையறைகளுக்கு வெளியில் இல்லை. அல்லாஹ்வின் சட்டங்களை இறையச்சமின்றி யாரும் செயல்படுத்தவும் முடியாது. பகரா அத்தியாயத்தை ஆழ்ந்து படித்துப் பார்த்தால் அதில் சமூக வாழ்வின், குடும்ப வாழ்வின் சட்டங்கள் இடம்பெற்றுள்ளது தெரியும். அங்கு ஒவ்வொரு சட்டங்களைக் கூறிய பின்பு 'இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள்'

'அவனின் வேதனை கடுமையானது'

'அவன் கேட்டுக் கொண்டு இருக்கிறான்'

'அவன் பார்த்துக் கொண்டிருக்கிறான்'

'அவன் உன்னோடு இருக்கிறான்'

போன்ற வசனங்களைப் பார்க்க முடியும். 'எனினும் இறைவனுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள்' என்பது கொடுக்கல் வாங்கலில், குடும்ப வாழ்வில், மனைவி மக்கள், பணியாள் போன்றோருடன் நீதமுடன் நடந்து கொள்ள வேண்டும். உரிமைகளை வழங்க வேண்டும் என்பதற்கு அளவுகோலாக உள்ளது.

அநாதைகளின் உரிமைகளை அவசியம் நிறைவேற்றியாக வேண்டும். அநாதைகள் ஆதரவற்றவர்கள்.



அநாதைகள் தங்களைத் தற்காத்துக் கொள்ள முடியாதவர்கள். ஆகவே அநாதைகளின் பொருளை விழுங்குபவர்கள், தங்களின் வயிற்றில் நெருப்பை நிரப்பிக் கொள்கின்றனர். முஸ்லிம் சகோதரன் தன்னுடைய செயல்களுக்கான இயலாமையின் காரணத்தைக் கூறினால் அதனை ஏற்றுக் கொள்வது அவசியமாகும். ஒவ்வொரு திங்கட்கிழமையிலும், வியாழக்கிழமையிலும் மக்களின் செயல்கள் அல்லாஹ்வுக்கு முன் கொண்டு வரப்படுகின்றன. யார் இணை வைத்தாரோ முஸ்லிமைக் குறித்து தன் உள்ளத்தில் வன்மமும் பகையும் கொண்டிருந்தாரோ அதன் காரணமாக அவரின் உறவு முறிந்து போய் விட்டதோ அவரைப் பற்றி அல்லாஹ் கூறுவான். 'அவரின் விவகாரத்தைத் தள்ளிப் போடுங்கள்.' இதன் காரணமாக அவரின் மற்ற செயல்களுக்கும் தீர்வு கிட்டாது.

உத்தரவாதம் அளித்தபின் அதனை திரும்பப் பெறுவதற்கு அனுமதி இல்லை. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், மக்களை ஏமாற்றி தன் இருப்பிடத்திற்குக் அழைத்து வருவதற்கு அவர் பகைவராக, எதிரியாக, நிராகரிப்பவராக இருந்தாலும் அனுமதி வழங்கவில்லை. கொடுத்த வாக்கை மீறுவதற்கும் அதன் காரணமாக இழப்பை ஏற்படுத்துவதற்கும் அனுமதி இல்லை. பாதுகாப்பும் ஆதரவும் வழங்கியபின் இழப்பை ஏற்படுத்துபவரை விட்டும் நான் விலகிக் கொள்கிறேன்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள். 'அவர் நிராகரிப்பாளராக இருந்தாலும்' என்ற வரி கூடுதலாகவும் உள்ளது. பொய் வாக்குறுதிகளை அளித்துவிட்டு ஆசை வார்த்தைகளைக் கூறிவிட்டு அவரைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவருக்குத் துன்பங்கள் கொடுப்பதற்கும் அனுமதி இல்லை. நிராகரிப்பாளரிடமும் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது.

பரஸ்பர உறவில் இறையச்சத்திற்கு இரண்டு அடிப் படையான கொள்கை நெறிகள் உள்ளன. ஒன்று நீதி, மற்றொன்று உறுதிமொழி. இவ்விரண்டையும் ஒருவர் மேற்கொண்டால் சமூக இறையச்சம் என்கிற பரஸ்பர உறவுகள் அதன் முழுமையான எல்லைக்குள் அடங்கிவிடும்.

## முதலாவது நீதி

நீதி செலுத்த வேண்டும் என குர்ஆன் கட்டளை யிடுகிறது. இறைநம்பிக்கை கொண்டோர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்காக வாய்மையில் நிலைத்திருப்போராயும் நீதிக்குச் சான்று வழங்குவோராயும் திகழுங்கள்! எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள பகைமை உங்களை நீதியிலிருந்து பிறழச் செய்து விடக் கூடாது. நீங்கள் நீதி செலுத்துங்கள். இதுவே இறையச்சத்திற்கு மிகப் பொருத்தமானது. *(அல்குர்ஆன் 5:8)*

இவ்வசனத்தில் குரைஷி நிராகரிப்பாளர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவர்கள் முஸ்லிம்கள் மீது அநீதி இழைத்து வந்தார்கள். ஊரை விட்டு அநியாயமாக வெளியேற்றினார்கள். போர் தொடுத்தார்கள். ஹஜ் ஜையும் உம்ராவையும் செய்ய விடாமல் தடுத்தார்கள். இதனால் முஸ்லிம்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் போனது. இவ்வாறு எல்லாம் இருந்தும் கூட இதன் காரணமாக நீங்கள் அவர்களுக்கு எதிராகச் செயல்பட உங்களை நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்திக் கொள்ள வேண்டாம் என்றே கூறப்பட்டுள்ளது.

''உங்களோடு போர் புரிபவர்களுடன் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் போர் புரியுங்கள். ஆனால் நீங்கள் வரம்பு மீறாதீர்கள். ஏனெனில் வரம்பு மீறு பவர்களை அல்லாஹ் நேசிப்பதில்லை.'' *(2:190)* மக்கா



வில் பதின்மூன்று ஆண்டுகள் கொடுமைகளை அனுப வித்து விட்டு மதீனா வந்த பின்னர்தான் போருக்கான அனுமதியே கிடைத்தது. அதிலும் கூட ஒவ்வொரு விவகா ரத்திலும் நீதி செலுத்துவதற்கான கட்டளையே இருந்தது.

நீதியை நிலைக்கச் செய்யவே முஸ்லிம் சமுதாயம் தோற்றுவிக்கப்பட்டது. ஒவ்வொரு விவகாரத்திலும் நீதிக்குச் சான்றாக எழுந்து நிற்க வேண்டும். இதுவே இறையச்சத்தின் பாதையாகும்.

''இறைநம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நீதியைக் கடைப்பிடிப்பவராகவும் அல்லாஹ்வுக்காகச் சான்று வழங்குபவராகவும் திகழுங்கள். (நீங்கள் செலுத்தும் நீதியும், வழங்கும் சாட்சியும்) உங்களுக்கோ உங்கள் பெற்றோருக்கோ நெருங்கிய உறவினருக்கோ பாதகமாக இருந்தாலும் சரியே! (நீங்கள் யாருக்காக சாட்சி சொல் கின்றீர்களோ) அவர் செல்வந்தராகவோ ஏழையாகவோ இருந்தாலும் சரியே! அல்லாஹ் அவர்களின் நலனில் உங்களை விட அதிக அக்கறை உள்ளவனாக இருக்கிறான். எனவே மன இச்சையைப் பின்பற்றி நீதி தவறி விடா தீர்கள். நீங்கள் உண்மைக்குப் புறம்பாக சாட்சி சொன் னாலோ சாட்சியளிக்காமல் விலகிச் சென்றாலோ திண்ணமாக அல்லாஹ் நீங்கள் செய்கின்றவற்றையெல் லாம் நன்கு அறிபவனாக இருக்கிறான்.''

*(அல்குர்ஆன் 4:135)*

இரண்டாவது உறுதிமொழி ஆகும். வாயிலிருந்து வெளியே வந்து விட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் கட்டுப்படுவது அவசியமாகும். எந்த இடத்தில் யார் இடத்தில் உறுதிமொழி அளித்திருந்தாலும் அதனைப் பூர்த்தி செய்ய வேண்டியது அவசியமாகும். அடைக்கலப் பொருள் ஒப்படைக்கப்பட்டிருந்தால் அதனைப் பாது

காப்பதும் திரும்பக் கொடுத்து விடுவதும் பொறுப்பாகும். ஏனெனில் இதுவும் உறுதிமொழியே ஆகும்.

## சமூக வாழ்வின் விருப்பம்

இறையச்சம் மற்றும் சமூக இறையச்சத்தின் வட்டம் மனிதர்களுக்கு மத்தியில் கொடுக்கல் - வாங்கல் தொடர்பானது. இரண்டாவது வட்டம் சமூக வாழ்வோடு தொடர்புடையது. இவ்வட்டத்தில் குடும்பத்தாரும் உள்ளடங்கி இருக்கிறார்கள். முஸ்லிம் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகளிலும் நிறுவனங்களிலும் இவற்றிற்கும் மேலாக அரசும், அரசு நிறுவனங்களும் மனிதன் இன்னொரு மனிதனுடன் உறவு கொள்ளக் கூடிய இடங்களாக இருக்கின்றன. இங்கு இறையச்சம் தான் அனைத்திற்கும் மையமாக இருக்கிறது என அழுத்தமாக விவரிக்கப்பட்டுள்ளது. நாடு என்று வரும் போது ஆட்சியாளர்கள் மக்களிடையே நீதியுடன் நடந்து கொள்ள வேண்டியது கடமையாகும். பொய் கூறும், வாக்கு மீறும் ஆட்சியாளர்கள் நேராக நரகம் செல்வார்கள் என்றே கூறப்பட்டுள்ளது.

''மூன்று மனிதர்கள் உள்ளனர். அவர்களை கேள்வி கணக்கின்றி அல்லாஹ் நெருப்பில் போட்டு விடுவான்'' என நபிமொழியில் காணப்படுகின்றது. 'அவர்களில் ஒருவர் பொய் கூறும் தலைவர், மக்களிடம் பொய் பேசிக் கொண்டிருக்கும் தலைவர். முஸ்லிம்களின் ஏதேனும் ஒரு பணிக்குப் பொறுப்பாளராய் ஆக்கப்பட்டிருக்கும் ஒருவர் அவர்களை ஏமாற்றுகிறார்; மோசடி செய்கிறார். அவர் நம்மைச் சார்ந்தவரல்லர்' என்றே கூறப்பட்டுள்ளது. இவ்வாறு நடந்து கொள்வதும் இறையச்சத்திற்கு எதிரானது தானே. செல்வமும் பொருளும் பொதுமக்களுக்குரியதாக இருக்கும் போது அது ஓர் அடைக்கலப் பொருளாகும்.



அதிலிருந்து ஒரு கயிறு, ஒரு போர்வை, ஒரு மேலாடை மோசடி செய்யப்பட்டாலும் அதுவே இவரை நரகத் திற்குக் கொண்டுபோய் விடும். செல்வம் மற்றும் மக்களின் உரிமை பற்றிய முன் எச்சரிக்கைகள்தான் இவை அனைத்தும். ஆட்சியில் இருக்கிறார் என்பதற்காக எந்தச் சிறப்பும் இதில் இல்லை. ''யார் முஸ்லிம்களின் பணிக்குப் பொறுப்பாளராய் ஆக்கப்பட்டுள்ளாரோ'' என்றே கூறப்பட்டுள்ளது. இவர்கள் அனைவர் மீதும் தக்வாவின் வரையறைகள் கட்டாயமாகின்றன.

வழிநடத்திச் செல்பவர்கள், அவர்களைப் பின் தொடர்ந்து செல்பவர்கள் இவர்கள் இருவருக்கும் இருக்க வேண்டிய சட்டங்களும் தெளிவாக எடுத்துரைக்கப் பட்டுள்ளன. அறிவுரைகளும் உண்டு. ஹுஜுராத்தின் (அத்தியாயம் 49) மத்திய பகுதியில் முஸ்லிம்களுக்கு இடையே இருக்க வேண்டிய பரஸ்பர உறவுகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அத்தியாயத்தின் ஆரம்பப் பகுதியில் முஸ்லிம்கள் தங்களுடைய தூதரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் தூதர் பெற்றிருந்த அந்தஸ்தை எந்த ஒரு மனிதனும் பெற்றுவிட முடியாது.

வழிநடத்திச் செல்பவர்களிடம் தங்களுடைய பேச்சைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என அடம் பிடிப்பது, தன்னுடைய பேச்சில் பிடிவாதமாய் இருப்பது, தன் னுடைய கருத்திலேயே விடாப் பிடியாய் நிற்பது, தன் னுடைய பேச்சுகள்தான் ஏற்கப்பட வேண்டும் என்ப தற்காக முயற்சிகள் மேற்கொள்வது, இதற்காகத் தன் குரலை உயர்த்தி சண்டை, சச்சரவுகளில் ஈடுபடுவது இவை யாவும் அல்லாஹ்வின் தூதருக்கு முன் நடப்பது பண்பற்ற செயல்களாகும்.

இத்தகைய செயல்பாடுகள் கிராமத்து அரபிகளிடம் இருந்தன. சரியான பொருளில் இறைநம்பிக்கை கொள்ளாமல் இஸ்லாமின் மேலாதிக்கத்தைக் கண்டு முஃமின்களாய் மாறியிருந்தனர். அவர்களின் பேச்சுகள் ஏற்கப்பட வேண்டும் என விரும்பினர். அவர்களின் ஆலோசனைகள் ஏற்கப்பட வேண்டும் என விரும்பினர். அவர்களின் ஆலோசனைகள் ஏற்கப்பட வேண்டும். சபைகளில் அவர்களுக்கு தனி அந்தஸ்து கொடுக்கப்பட வேண்டும். அவர்கள்தாம் முதலில் அழைக்கப்பட வேண்டும் என்றும் கருதினர். இவற்றையெல்லாம் முன் வைத்துதான் ஹுஜுராத் அத்தியாயத்தின் ஆரம்பத்திலேயே 'அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்' என்று கூறப்பட்டுள்ளது.

இதற்கடுத்து, இறையச்சமுள்ளவர்கள் அல்லாஹ்வுக்கும் ரசூலுக்கும் முன்பாக முந்திக் கொள்ள மாட்டார்கள். அவர்களுக்கு முன் தங்கள் குரலைத் தாழ்த்திக் கொள்வார்கள். அடக்கமாகப் பேசுவார்கள். சொல்லப்படுவதைக் கேட்பதற்கு ஆயத்தமாக இருப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அவர்களைப் பற்றிதான் அல்லாஹ் கூறுகிறான்:

*''அத்தகையவர்களின் உள்ளங்களை இறையச்சத்திற்காக அல்லாஹ் பரிசோதித்துத் தேர்ந்தெடுத்திருக்கிறான்.'' (அல்குர்ஆன் 49:3)*

## அநீதிக்குப் பரிகாரம்

சமூக இறையச்சத்தின் பல்வேறு அம்சங்களை உங்களுக்கு முன் வைத்துள்ளேன். அனைத்தையும் விட மனிதனுக்கும் மனிதனுக்குமுள்ள தொடர்புகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டுள்ளது. அதன் பின் கூட்டு வாழ்வின்



சில அறிகுறிகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இதன் சாராம்சம்தான் நான் ஆரம்பத்தில் சொல்லியிருக்கும் செய்தி. தீனின் கட்டளைகளுக்குக் கீழ் வராத எந்தவொரு செயலும் இறையச்சத்துடன் தொடர்பு கொண்டிருப்பதில்லை. அநீதிக்காக இழப்பீடு பெறுவதற்கும் அனுமதியுண்டு. ஈடு பெற வேண்டும் எனும் எண்ணம் மிகைத்திருக்கும் போது மனிதன் அநீதி இழைக்கிறான்.

ஒருவர் பழிவாங்க நாடினாலும் எந்த அளவிற்கு அநீதி இழைக்கப்பட்டதோ அதே அளவுதான் பழிவாங்க வேண்டும் என்பதற்கும் தெளிவான வழிகாட்டுதல்கள் உள்ளன. யாருக்கு அநீதி இழைக்கப்பட்டதோ அவருக்கு ஈடுபெறும் உரிமை உள்ளது என குர்ஆன் எடுத்துக் கூறுகிறது. அதே நேரத்தில் எந்த அளவிற்கு அநீதி இழைக்கப்பட்டதோ அதே அளவு மட்டுந்தான் ஈடு பெறவும் உரிமையுள்ளது. இழப்பீடு பெறும்போது வரம்பு மீறி அதிகமாகப் பெற்றுவிட்டால் அதுவே பெரும் சுமையாக மாறி விடுகிறது. இதனால்தான் மன்னித்து விடுதல் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

''இனி எவர் மன்னித்து விடுகின்றாரோ மேலும் சீர்திருத்தம் செய்கிறாரோ அவருடைய கூலி அல்லாஹ்வின் பொறுப்பில் உள்ளது.'' *(அல்குர்ஆன் 42:40)*

ஈடு பெறும் போது அதே அளவுதான் துல்லியமாக ஈடு பெறுவார் என்பதற்கு உத்தரவாதமில்லை. ஈடு பெறுவதை விட மன்னிப்பதுதான் சிறந்தது.

ஒரு தோழர் நபிபெருமானாரிடம் வந்தார். ''பெருமானார் அவர்களே! என்னிடம் ஊழியர்களும் பணியாளர்களும் அடிமைகளும் நிறைய உள்ளனர். அவர்கள் என்னுடைய பணிகளை நிறைவேற்றுகிறார்கள்.

இருந்தாலும் என்னைப் பொய்யன் என்கிறார்கள். பணியில் எனக்கு மோசடி செய்கிறார்கள். பணிகளை முழுமையாகச் செய்வதில்லை. பணத்தையும் திருடு கிறார்கள். எனக்கு நன்றி மறப்பவர்களாகவும் இருக் கிறார்கள். எனக்கும் அவர்களுக்கும் இடையில் எவ்வாறு தீர்ப்பு வழங்கப்படும்?'' என்று கேட்டார். ''நீங்கள் அவர்களுக்களித்த தண்டனைகளும் ஏசிய பேச்சுகளும் ஒருபுறம் வைக்கப்படும். அவர்கள் செய்த தவறுகள் அனைத்தும் மறுபுறம் வைக்கப்படும். இரண்டும் சமமாக இருந்துவிட்டால் நீங்கள் விட்டு விடப்படுவீர்கள். ஆனால் நீங்கள் அவர்களை தண்டிப்பதில் அநீதி இழைத் திருந்தீர்கள் எனில் எந்தளவு அநீதி இழைக்கப்பட்டிருந் ததோ அந்தளவு உங்களிடம் பழிவாங்கப்படும். உங்களிட மிருந்து அதற்கான ஈடு பெறப்படும்'' என்று நபிகள் கூறினார்கள்.

இதைக் கேட்டவுடன் சற்று தொலைவில் போய் அமர்ந்து கொண்டு, ''நான் அழிந்து போய் விட்டேன்'' எனக் கூறியவாறு தேம்பித் தேம்பி அழுதார். பிறகு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவரை அழைத்து, ''நாம் மறுமை நாளில் துல்லியமாக எடை போடப்படும் தராசுகளை நிறுவுவோம். பிறகு எவருக்கும் இம்மியளவும் அநீதி இழைக்கப்பட மாட்டாது. எவருடைய ஒரு கடுகுமணியளவு செயலாயினும் அதனை நாம் (அங்கு) அவர் முன் கொண்டு வருவோம். கணக்கு வாங்குவதற்கு நாமே போதும். (அல்குர்ஆன் 21:47) எனும் வசனத்தைப் படிக்கவில்லையா?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் பெருமானாரே... ''இதற்குப் பிறகு நான் அவர்கள் அனைவரையும் மன்னித்து விடுதலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை. இன்று நான்



அவர்கள் அனைவரையும் விடுதலை செய்துவிட்டேன்'' என்றார்.

செய்த தவறுக்காக தண்டனை கொடுக்கும் போது ஒரு சாட்டையடி அதிகமாக விழுந்தாலும் அதற்கான பழி வாங்கப்படும். பழி வாங்கும்போது ஆவேசம் மறைந் திருக்கும். அதன் காரணமாக சில போது புறங்கூறலில் இறங்கி விடுவார்கள். அல்லது வரம்பு மீறுவார்கள். எனக்கு இழப்பை ஏற்படுத்தி விட்டார் என்ற ஆத்திரத்தில், என் மதிப்பைக் கெடுத்து விட்டார் என்ற அவமானத்தில், உரிமையைப் பறித்து விட்டார் என்ற எரிச்சலில் - கோபத்தில் நியாயமான வரம்புகளை மீறுவதற்கும் வாய்ப்புள்ளது. பொருளாசை காரணமாக உரிமைகளைச் சிதைக்கவும் பழிதீர்த்துக் கொள்வதற்கும் முற்படக் கூடும். இந்நேரங்கள் மனிதர்களுக்கு சிக்கலான, நுட்பமான விவகாரங்கள் ஆகும்.

ஒருவர் இன்னொருவருக்கு அநீதி இழைக்காமல் துன்பம் தராமல் வாழ்வதுதான் அல்லாஹ்வின் பயத்தின் காரணமாகப் பிறரின் உறவைச் சீரோடு வைத்துக் கொள்வதற்கு மனிதனுக்குரிய சோதனை ஆகும்.

## இறைநம்பிக்கை மற்றும் இறையச்சத்தின் வழி

இவ்வுலகில் என்னுடைய பிரதிநிதியைப் படைக்கப் போகிறேன் என்று இறைவன் மலக்குகளிடம் கூறிய போது, ''பூமியில், அதன் ஒழுங்கமைப்பைச் சீர்குலைத்து, மேலும் இரத்தம் சிந்தக் கூடியவரையா அதில் (பிரதிநிதி யாக) நீ ஏற்படுத்தப் போகின்றாய்? நாங்கள்தாம் உன்னைப் புகழ்ந்து, துதி பாடி உன் தூய்மையைப் போற்றிக் கொண்டு இருக்கின்றோமே!'' என்று கூறி னார்கள். ஸஜ்தா மற்றும் ருகூவு செய்வதற்கு எண்ணற்றோர்

அங்கு இருந்தார்கள். வானத்தில் ஒரு சாட்டை வைக்கும் அளவுக்குக் கூட இடமில்லாதவாறு அங்கு மலக்குகள் ஸஜ்தா, ருகூவு, தஸ்பீஹ், ஹம்து, தக்பீர் போன்றவற்றில் ஈடுபட்டுக் கொண்டு இருப்பார்கள் என ஒரு நபிமொழி யில் காணப்படுகின்றது.

நீதியை நிலைக்கச் செய்ய வேண்டும். குழப்பத்தைத் தவிர்க்க வேண்டும்; தன் பொறுப்பினை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் கலீஃபா - பிரதிநிதியைப் படைத்தான். மனிதனின் ரத்தம் வெளி யேற்றப்படக் கூடாது. அவன் கண்ணியத்தின் மீது தாக்குதல் தொடுக்கக் கூடாது. செல்வம் சூறையாடப் படக் கூடாது. இவை யாவும் சோதனைகளாக ஆக்கப் பட்டுள்ளன. இதன் மூலமாகவே இறையச்சத்தின் வட்டம் பெரிதாகி முழு வாழ்வையும் தழுவிக் கொள்கிறது. இச்சோதனைகளில் குறை ஏற்பட்டால் இபாதத்துகள் சீராகாமல் அனைத்தும் அவரிடமிருந்து பிடுங்கிக் கொள்ளப் படும். இச்சோதனை மட்டும் ஒருவரின் நினைவில் இருந்தால் பெரும்பாலான தவறுகள் நடக்காமல் தடுக்கப்பட்டு விடும்.

இமாம் அபூஹனீஃபா (ரஹ்) அவர்களிடம் 'ஒருவர் இன்ன மனிதர் உங்கள் மீது புறங்கூறிக் கொண்டிருக்கிறார்' எனக் கூறியபோது இமாம் அவர்கள் பெரிய தட்டு ஒன்றில் பேரீத்தம் பழங்களை புறங்கூறிய மனிதருக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார். 'இன்று அவருடைய பல நன்மைகளை என் பங்கில் சேர்த்து விட்டார். அதற்கான ஈட்டை என்னால் செய்ய முடியாது. இருந்தபோதும் சில பேரீத்தம் பழங்களை அனுப்பி வைக்கிறேன்' என்று கூறினார்.

மற்றவருக்கு அநீதி இழைக்கும் ஒருவர் நன்மைகள் பலவற்றைக் கைகழுவி விடுகிறார். அவரின் செயல் ஏட்டிலிருந்து நன்மைகள் குறைந்துவிடுகின்றன. உலக



வாழ்வும் குழப்பத்திற்கும் அமைதியின்மைக்கும் பழியாகி விடுகிறது. பொறாமையினால் சில போது உள்ளம் பற்றி எரிகிறது. பழிவாங்க வேண்டும் என்ற உணர்வில் நிம்மதி யிழந்து கொழுந்து விட்டு எரிகிறது. பொறாமையும் வன்மமும் நன்மைகளைத் தின்றுவிடும் தன்மை கொண்டவை. பழிதீர்க்கும் நெருப்பும், பொறாமையின் நெருப்பும் மனிதனுள் புகுந்து செயல ஆற்றும் போது அவனின் அனைத்து நன்மைகளும் நிர்மூலமாகி விடுகின்றன. நன்மைகள் எரிந்து சாம்பலாகி விடுகின்றன. இவை யாவும் நன்மைகளைத் தின்றுவிடும் நோய்கள். மனித உறவில் குழப்பம் ஏற்படுவதை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் 'சவரக் கத்தியைப் போன்றது' என்றார்கள். "இச்சவரக் கத்தி தலைமுடியை மழிப்பதுடன் முழு தீனையும் மொட்டை அடித்து விடுகிறது" என்று கூறினார்கள்.

## இறைவனின் கொடைகளுக்கும் நற்செய்திகளுக்குமான காரணம்

நம் பார்வையில் எல்லா நேரத்திலும் சமூக இறை யச்சத்தின் ஓர் அம்சம் பதிந்திருக்க வேண்டும். அதற்கான முன் முயற்சியும் சிரத்தையும் வேண்டும். இறையச்சத்தின் இத்தகைய பண்பு உருவாகாத வரை தொழுகை, நோன்பு இன்னும் மற்ற இபாதத்துகளும் பலனளிப்பதில்லை. இந்த இறையச்சம்தான் அனைத்து சிறப்புகளுக்கும் நன்மைகளுக்கும் அடித்தளமானது. அல்லாஹ் இவ்வுல கிலும் மறுமையிலும் தன்னுடைய அனைத்து அருட்கொடை களையும் நற்செய்திகளையும் இறையச்சத்துடன் தொடர்பு படுத்தி வைத்துள்ளான். இறையச்சத்தின் வழியை மேற் கொள்ளும் சமூகங்கள் பூமி மற்றும் வானத்தின் அனைத்து அருள் வளத்தையும் பெற்றுத் திகழ்வார்கள்.

''அவ்வூர்களில் வாழ்ந்த மக்கள் இறைநம்பிக்கை கொண்டு, இறையச்சமுள்ள நடத்தையை மேற்கொண்டு இருப்பார்களேயானால் வானம், பூமி ஆகியவற்றின் அருள் வளங்களின் வாயில்கள் அனைத்தையும் அவர்களுக்கு நாம் திறந்து விட்டிருப்போம்.'' *(அல்குர்ஆன் 7:96)*

சுவனம் இறையச்சமுள்ளவர்களுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ளது என குர்ஆன் பல இடங்களில் கூறுகிறது.

''அது வானங்கள், பூமியின் அளவிற்கு விரிவானது. மேலும் அது இறையச்சமுடையோருக்காக தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது.'' *(அல்குர்ஆன் 3:133)*

''இறையச்சமுள்ளவர்கள் அங்கு சுவனங்களிலும் அருட்பேறுகளிலும் இருப்பார்கள்.'' *(அல்குர்ஆன் 52:17)*

தக்வா - இறையச்சம் என்பதன் பொருள் உங்கள் முன் உள்ளது. இறையச்சம் என்பது இதயத்துடிப்பு, அச்சம் போன்றது. இறைவனின் வெறுப்பிற்குக் காரணமாகும் எந்த ஒரு வார்த்தையும், எந்த ஒரு செயலும் தன்னிட மிருந்து வெளிப்பட்டுவிடக் கூடாது என்கிற உறுத்தல் இதயத்தில் இருக்க வேண்டும். இறைவனின் வெறுப்பிற்கு ஆளாகும் செயல்களிலேயே அதிக கோபத்திற்கு ஆளாகும் செயல் இதுதான் என்கிற உணர்வு இருக்க வேண்டும். உண்ணுவதிலும் பருகுவதிலும் மட்டுமே ஹராம் என்ப தில்லை. மனித உறவுகளில் அல்லாஹ் எண்ணற்ற விஷயங் களை ஹராமாக்கி எண்ணற்ற வற்றைக் கடமையாக்கி யுள்ளான் என்கிற உணர்வும் வேண்டும்.

இபாதத்தில் - வணக்க வழிபாடுகளில், உணவு முறைகளில் ஹலால் ஹராம் கட்டுப்பாடுகளைப் பேணும் ஒருவர் மனித விவகாரங்களில் ஹலால் ஹராம் எது என்பதைக் கண்டுகொள்வதில்லை. தொழுகை விடுபவன்,



வட்டி உண்பவன், மது அருந்துபவன் எவ்வாறு பாவி ஆகிறானோ அவ்வாறு மனித உறவுகளில் தவறு செய்பவர்களும் பாவிகள் ஆவர். மூஃமினின் மனச்சாட்சி ஒரு துலாக்கோலைப் போன்றிருக்க வேண்டும். மற்ற வருக்கு அநீதி இழைப்பதால், வரம்பு மீறுவதால், பிறரின் உரிமைகளைப் பறிப்பதால் துலாக்கோல் சாய்ந்து விடும். அந்நேரத்தில் அவரின் மனச்சாட்சி நோவினை தர வேண்டும்; வருந்த வேண்டும்.

''உண்மையில் எவர்கள் இறையச்சத்துடன் வாழ் கின்றார்களோ அவர்களுக்கு ஷைத்தானுடைய தாக்கு தலினால் ஏதேனும் தீய எண்ணம் ஏற்பட்டால் உடனே விழிப்படைந்துவிடுவார்கள். அப்போது அவர்களுக்கு (சரியான செயல்முறை எதுவென்பது) தெளிவாய்ப் புலப்பட்டு விடுகின்றது.'' *(அல்குர்ஆன் 7:201)*

# ஒழுக்கத்தின் ஐந்து அடிப்படைப் பண்புகள்

இன்றுள்ள சமூகத்தை ஆழ்ந்து நோக்கினால் பொதுவாகவே வாழ்வில் நிம்மதி இழந்திருப்பது தெரிகிறது. சோதித்துப் பார்த்தால் இந்நிலைக்குப் பல காரணங்களைத் தேடிவிட முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கம் நன்றாக இல்லை என்பதுதான் காரணம். சில ஒழுக்கக் கேடுகளைத் தவிர்த்து விட்டு வேறு சில நல்லொழுக்கங்களை மேற்கொண்டிருந்தால் பெரும்பாலான துன்பங்கள் ஏற்பட்டிருக்க வாய்ப்பே இல்லை.

தீனில் ஒழுக்கத்திற்கென்று கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தை சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. இபாதத் ஒருபக்கம் இருக்கட்டும்; நல்ல முஸ்லிமாக வாழ்வதற்கே நல்லொழுக்கம் மிகவும் அவசியமாக உள்ளது. ஒழுக்கக் கேடனாக இருப்பவன் நல்ல முஸ்லிமாக இருக்க முடியாது.

ஒழுக்க நிலை பற்றியும் அதன் மாண்புகள் பற்றியும் நாம் அனைவரும் நன்கு அறிந்துள்ளோம். நல்லொழுக்கத்தைக் கைவிட்டால் ஈடேற்றத்திற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை. தீய ஒழுக்கத்தின் மூலதனத்தைத் திரட்டிக் கொண்டிருப்பதால் அழிவிலிருந்தும் நாசத்திலிருந்தும் காப்பாற்றுவதற்கு எதனாலும் முடியாது. தீய ஒழுக்கத்தின் காரணமாக அல்லாஹ்வின் வெறுப்பும் நம் பங்கில் வந்து சேருகிறது. மனிதர்களின் உறவுகளும் சீர்கெட்டுப் போய்விடுகின்றன. மனித உறவுகளின் சீர்கேடு தீனையே அழித்து விடுகிறது.



''உறவுகளின் சீர்கேடு சவரக் கத்தியைப் போன்றது. இச்சவரக் கத்தி முடியை மட்டுமே சிரைக்கும் என்று நான் சொல்லவில்லை. மாறாக, இது தீனையே மழித்துவிடும் சவரக் கத்தியாகும்'' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முழு தீனும் அழிந்து போவதை உதாரணத்தோடு நமக்கு விளக்கியுள்ளார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோழர்களிடம் கேட்டார்கள்: ''முஃப்லிஸ் யார் என்று நீங்கள் அறிவீர்களா?'' தோழர்கள் கூறினார்கள்: யாரிடம் பணம் இல்லையோ, உலக செல்வங்கள் இல்லையோ அவரையே நாங்கள் முஃப்லிஸ் என்று நினைக்கிறோம்.''

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ''இல்லை! என்னுடைய உம்மத்தில் மறுமை நாளில் தொழுகை, நோன்பு, தர்மம் போன்ற எண்ணற்ற இபாதத்துகளை ஒன்று திரட்டிக் கொண்டு ஒருவர் வருவார். அவர் மற்றவருடைய உரிமைகளைப் பறித்தவராக, மற்றவர்கள் மீது பழி சுமத்தியவராக, மற்றவர்களைத் திட்டியவராக, அடித்தவராக, காயப்படுத்தியவராக வருவார். அவரைச் சுற்றி பாதிக்கப்பட்டவர்கள் நியாயம் கேட்டு நின்று விடுவார்கள். அவர் செய்த தவறுகளுக்காகப் பரிகாரம் காணப்படும். அவரின் அனைத்து மூலதனமான தொழுகை, நோன்பு, தர்மம் மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும். இறுதியில் அவரின் அனைத்து நன்மைகளும் கரைந்து போய்விடும். பரிகாரம் கோருபவர்கள் இன்னும் மீதம் இருப்பார்கள். பிறகு மற்றவர்களின் பாவங்கள் அவரின் பொறுப்பில் மாற்றப்படும். இறுதியில் நரகத்திற்கு உரியவர் ஆகிவிடுவார்'' என்றார்கள். நன்மையின் பெரும் மூலதனமும் தீய ஒழுக்கத்தின் காரணமாக ஒன்றுமில்லாமல் போய்விடும்.

மறுமை நாளில் அல்லாஹ்வின் முன் சமர்ப்பிக்கப் படும் அமல்களின் பதிவேடு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்படும் என நபிமொழியில் காணப்படுகிறது.

முதல் பாகத்தை அல்லாஹ் மன்னிக்கவே மாட்டான். இரண்டாவது பாகம் கண்டுகொள்ளப்படாது. விரும்பி னால் மன்னிக்கப்படும் அல்லது மன்னிக்கப்படாது. மூன்றாவது பாகம் அதில் ஓர் எழுத்துக் கூட விடுபடாமல் விசாரிக்கப்படும்.

மன்னிக்கப்படாத முதல் பாகம் இணைவைப்பு தொடர்பானது. இரண்டாவது பாகம் மனிதன் தன் மீது செய்து கொண்ட தவறுகள். அல்லாஹ்வுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை விட்டு விட்டது. உதாரணமாக, தொழுகை, நோன்பை விட்டு விடுதல் இவை யாவும் மன்னிக்கப்படலாம் அல்லது தவறுகளுக்கு ஏற்ப தண்டிக்கப்படலாம்.

மூன்றாம் பாகம் ஓர் எழுத்தும் விட்டு விடப்படாது என்பது மஆமிலாத் - கொடுக்கல் வாங்கல் தொடர் பானது. ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையிலானது. இது தொடர்பான அனைத்தும் தீர்க்கப் பட்டு விடும். ஏனெனில் இவை யாவும் அல்லாஹ்வுடன் தொடர்பு கொண்டவை அல்ல. மனிதனின் தனிப்பட்ட விவகாரமும் அல்ல. அநீதி இழைக்கப்பட்ட மற்றவர் களின் விவகாரம் ஆகும். மது, சூதாட்டம், பன்றி இறைச்சி ஆகிய தடுக்கப்பட்ட அனைத்தையும் விட முஸ்லிம்களின் உயிர், அவர்களின் பொருள், கண்ணியம் போன்றவை மதிப்பு வாய்ந்தது. இதில் அனைத்து முஸ்லிம்களும் சமமானவர்களே!

முஸ்லிமின் உடல் உறுப்பின் மூலமாக மற்ற முஸ்லிம் களின் பொருளும் கண்ணியமும் பாதுகாப்பாக இருக்க



வேண்டும் என்பதே முஸ்லிமுக்குரிய அறிமுகமாக கூறப் பட்டுள்ளது. இவை ஆணிவேர் போன்று அடிப்படை அந்தஸ்தைப் பெறுகிறது. நம்மை நாமே இவற்றிலிருந்து காத்துக் கொண்டோமெனில் தீய ஒழுக்கங்களின் வாயில் தானாகவே அடைபட்டு விடும். இங்கு ஐந்து அடிப்படை யான பண்புகளைக் காண்போம்.

## கர்வம் ஆணவம்

முதலாவது விஷயம் கர்வம் ஆகும். தன்னைத் தானே பெரியவனாக நினைப்பதுதான் கர்வம் என்பது. எனக்குள் கர்வம் எனும் நோய் ஏற்படாது என்று நினைக்கும் அளவிற்கு கர்வத்தின் தன்மை உள்ளது. பெரும் செல்வமும் பணமும் இருந்து அத்துடன் அதிகாரமும் சேர்ந்து கொள்ளும்போது பீற்றிக் கொண்டு திரிபவனை ஆணவக் காரன் என்கிறோம்.

கர்வத்தின் நோய் பொதுவானது. இந்நோய்க்கு ஒரு துறவியும் பலியாகலாம். ஓர் ஏழையும், ஓர் அறிஞனும் கூடப் பலியாகலாம். இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் அறிஞர்களிடம் கண்ட கர்வத்தைப் போன்று பொதுமக்களிடம் கண்டதில்லை."

கர்வம், அனைத்து தீமைகளின் ஆணிவேராகும். ஷைத்தான் ஆதம் (அலை) அவர்களுக்கு ஸஜ்தா செய்வ தற்கு மறுத்தபோது அவனுள் கர்வம் மறைந்திருந்தது. "ஷைத்தானே! உன்னை ஸஜ்தா செய்ய விடாமல் தடுத்தது எது? நானே அவரை இரு கரங்களால் படைத்தேன். நீ என்ன உயர்ந்த நிலையில் இருப்பவனா?" என்று அல்லாஹ் கேட்டான்.

"அதற்கு ஷைத்தான் பதிலளித்தான்: நான் அவரை விடச் சிறந்தவன். என்னை நெருப்பிலிருந்து படைத்தாய்.

அவரை மண்ணிலிருந்து படைத்தாய்.'' (அல்குர்ஆன் 38:76)

இவ்வாறு அவன் கர்வம் கொண்டான். தன்னைத் தானே பெரியவன் எனக் கருதினான். மண்ணால் படைக்கப்பட்டவருக்கு ஸஜ்தா செய்வது தன்னுடைய பெருமைக்கும் அந்தஸ்திற்கும் இழுக்கானது எனக் கருதினான். இதன் காரணமாகவே அல்லாஹ்வின் சாபத்திற்கு ஆளானான்.

கோபம், பழிவாங்கல், கேலி பேசல், புறம் கூறல் போன்ற எண்ணற்ற நோய்கள் கர்வத்தின் கருவிலிருந்தே பிறக்கின்றன. கர்வம் என்பதன் அறிமுகமே மனிதன் தன்னை ஏதோ ஒன்றாக நினைப்பதுதான். கர்வத்தைச் சுட்டிக் காட்டும்போது குர்ஆன் 'இஸ்திக்பார்' என்கிற வார்த்தையினைப் பெரும் எண்ணிக்கையில் பயன்படுத்தியுள்ளது. 'இஸ்திகபர' என்னும் வார்த்தையின் பொருள் 'அவன் தன்னைத் தானே பெரியவனாகக் கருதினான்' என்பதுதான்.

சிலர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவினார்கள்: ''ஒருவர் தன்னுடைய காலணி அழகாக இருக்க வேண்டும்; ஆடை அழகாக இருக்க வேண்டும் என நினைக்கிறார். இது கர்வம் ஆகுமா?''

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ''இல்லை! இது கர்வம் ஆகாது. கர்வம் என்பது ஒருவர் உண்மையை மறுப்பதும் மற்றவர்களுடன் கேவலமாக நடந்து கொள்வதும்தான். மற்றவர்களை இழிவானவர்கள்; தன்னை விடக் கீழானவர்கள் எனக் கருதுவதுதான்'' என பதிலளித்தார்கள். ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் உண்மையை மறுப்பது நேர்மைக்கும்,



உண்மையை விரும்புவதற்கும் எதிரானது. சத்தியத்தை ஏற்க மறுப்பவரின் நிராகரிப்பவரின் பின்னால் மிகப் பெரிய காரணியாக கர்வம் உள்ளது.

உண்மையை எடுத்துரைப்பவர்களை இளக்காரமாகப் பார்ப்பதும் கர்வம்தான். தவறைச் சுட்டிக் காட்டி அதைச் செய்தவரை எச்சரிக்கை செய்து பார்த்தால் தெரியும். பாம்பின் மீது காலை வைத்தது போன்று 'என்னைப் பார்த்து இவ்வாறு கூறிவிட்டாரா?' என தவறு செய்தவரின் உள்ளம் குமுறி எழும்.

''இறைவனின் அறிவுரை அருளப்படுவதற்கு நமக்கு மத்தியில் இவர் ஒருவர்தான் இருக்கிறாரா என்ன?'' (அல்குர்ஆன் 54:25)

உண்மையை எடுத்துரைத்த நபிமார்களைப் பார்த்து அம்மக்கள் கேட்ட கேள்விதான் இது.

'அல்லாஹ் அவரை வஹீ அறிவிப்பதற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டானாம்' என மக்கள் வெறுப்போடு பேசினார்கள். 'அந்தஸ்தும் செல்வமும் பெற்ற இவரை விடச் சிறந்த நபர் கிடைக்கவில்லையா?' என்றும் கேட்டார்கள். எனவே உண்மையை உரைப்பவர்களை இழிவாகவும் கீழானவர்களாகவும் கருதுவதும் தன்னைத் தானே சிறந்தவனாக நினைப்பதும் கர்வம் ஆகும். சத்தியத்தை மறுப்பதற்கு இதுவும் ஓர் அடிப்படைக் காரணமாகவுள்ளது.

'நான் சாதாரணமானவன்', 'நான் பெரிய பாவி' என்றெல்லாம் சிலர் கூறுகிறார்கள். இதற்குப் பின்னணியிலும் ஒருவித கர்வம் செயல்படுகிறது. இன்னும் சிலர் தங்களுடைய சிரமங்களை மிகைத்துக் கூறிக் கொண்டு 'அல்லாஹ் சாட்சியாக இருக்கிறான். நான் பெரிய

பாவியாக **உள்ளேன்**' 'என் எண்ணம் தூய்மையானது' என்று அடிக்கடி கூறுவார்கள். இவர்களுக்குப் பின்னாலும் தனக்குத் தானே சிறப்பித்துக் கூற வேண்டும் என்கிற உள்ளுணர்வே மறைந்திருக்கிறது. இவ்வாறான உணர்வு கள் தன்னையும் அறியாமல் மீண்டும் மீண்டும் மனித னுக்குள் புகுந்து கொள்கிறது.

மக்களில் சிலர் கேவலமாக நினைக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கும்போது என்னை யாரும் பார்த்துவிடக் கூடாது என நினைப்பதும் கர்வத்தின் ஒரு வடிவமே. சிலர் சொந்த வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிச் செல்வதையும் பாரமாகக் கருதுகிறார்கள். சிலர் வீட்டு வேலையைச் செய்வதைக் கூட வெறுக்கிறார்கள். மற்றவர்கள் பார்த்து விடுவார் களோ என நினைக்கிறார். இதற்குப் பின்னாலும் இவ்வகையான உணர்வுகளே தொக்கி நிற்கின்றன. உண்மையாக இருந்தாலும் மனைவி அதனைச் சொல்லும் போது கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. இதனை மற்றவர்கள் கூறியிருந்தால் இவ்வளவு கோபம் வந்திருக் காது. இவ்வாறான மனநிலைகள் எல்லா வகையான மனிதர்களிடமும் காணப்படுகிறது. இவை யாவும் கர்வத்தின் ஒரு நிலைதான்.

கர்வத்திலிருந்து முழுமையாக நம்மைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். தாழ்மை, அடக்கம், பணிவு போன்றவற்றை தேர்வு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனையும் அல்லாஹ் படைத்து அவனுள் தன்னுடைய ரூஹை ஊதியுள்ளான் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். ''அவனுள் தன்னுடைய உயிரை ஊதினான்'' *(அல்குர்ஆன் 32:9)* மனிதன் என்கிற அந்தஸ்தில் எல்லா மனிதர்களும் சமமானவர்களே. வீட்டு



வேலைக்காரன் கூட இரண்டு கண்களையும் இரண்டு காதுகளையும் பெற்றுள்ளான். அவனும் மனிதன்தான். அவரையும் அல்லாஹ் இப்பூமியில் நம்மைப் போன்று மனிதனாகவே படைத்துள்ளான். ஏதோ ஒரு படித் தரத்தையும் வழங்கியுள்ளான். வீட்டு வேலைக்காரனாக இருந்தாலும் ஒருவருக்கு மனைவியாக இருந்தாலும் அவர்கள் மனிதர்கள் என்பதில் எவ்வித வித்தியாசமும் ஏற்படுவதில்லை. அனைவரையும் அவன் மண்ணின் மூலத்திலிருந்தே படைத்தான். எல்லோரும் மனிதர்களே. மனிதனோ மண்ணிலிருந்து படைக்கப்பட்டான்.

ஒருவர் தன்னை உயர்ந்த குலத்தவனாகக் கருதி னாலும் எல்லா குலங்களும் ஒரே மனிதரிடமே போய் முடிகிறது. அவர் தான் ஆதம் (அலை) அவர்கள். சையத் ஆக இருந்தாலும் பட்டானாக இருந்தாலும் அல்லது வேறு எந்தக் குலத்துடன் தொடர்புடையவராக இருந்தாலும் அனைவரும் ஆதம் (அலை) அவர்களின் சந்ததியினரே. ஆதம் (அலை) அவர்களோ மண்ணால் படைக்கப் பட்டார்கள். உடலும் தோற்றமும் அல்லாஹ்வால் கொடுக்கப்பட்டது. பொருளும் செல்வமும் தற்காலிக மானது. மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்ப தெல்லாம் அல்லாஹ்வால் கொடுக்கப்பட்டது. பெருமை கொள்வது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரித்தானது. ஒரு நாளில் நூற்றுக்கணக்கான முறை அல்லாஹு அக்பர் என்று சொல்கிறோம்; கேட்கிறோம். அல்லாஹ் பெரியவன் என்பதால் மீண்டும் மீண்டும் உச்சரிக்கிறோம். கண்ணியம் என்பது அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. இதன் காரணமாகவே அல்லாஹ்வுக்கு மட்டுமே சிரம் தாழ்த்துக்கள். தாழ்மையை மேற்கொள்ளுங்கள் என அறிவுறுத்தப்படுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட உயர்ந்த படித்தரத்தில் இருக்கும் மனிதர் யாராக இருக்க முடியும். நபி அவர்கள் எப்பணியைச் செய்வதற்கும் வெட்கப்படுவதில்லை. ஆட்டின் பாலை தாங்களே கறந்து கொள்வார்கள். வீட்டிற்குச் சாமான் வாங்கித் தருவார்கள். தங்களின் காலணியை தானே தைத்துக் கொள்வார்கள். கிழிந்து போயிருக்கும் ஆடைகளை தைத்துக் கொள்வார்கள். வீட்டிற்கு வந்துவிட்டால் எப்போதும் புன்முறுவலோடு இருப்பார்கள். குழந்தைகளுக்கும் பெண்களுக்கும் ஸலாம் கூறுவார்கள்.

நாமோ, எனக்கு ஏன் ஸலாம் சொல்லவில்லை? எழுந்து உட்காருவதற்கு சரியான இடம் ஏற்பாடு செய்து தரவில்லை? நிகழ்ச்சி நிரலில் என்னுடைய பெயர் ஏன் கீழே உள்ளது? மேல் பக்கம் ஏன் வரவில்லை? மாநாட்டில் என்னை ஏன் அழைக்கவில்லை? போன்ற பலப் பல கேள்விகளைத் தொடுக்கிறோம்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன்மாதிரி எவ்வாறு இருந்தது? நபி அவர்கள் அடக்கமாய் அமர்ந்து உண்ணுவார்கள். உணவின் சிறு துண்டுகள் கீழே விழுந்து விட்டால் அவற்றையும் விடாமல் எடுத்து உண்பார்கள். அனைத்து உணவுகளும் அல்லாஹ்வால் வழங்கப்பட்டவை. அல்லாஹ் வழங்கியுள்ள பொருள்களின் மதிப்பிற்கு முன் மனிதன் எம்மாத்திரம்? அல்லாஹ்வின் பார்வைக்குள்ளே மனிதன் வாழ்கிறான். அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்கிற உணர்வினால் தாழ்மை, அடக்கம், பணிவு மனிதனுள் ஏற்படுகிறது.

ஆணவம் பல்வேறு தீமைகளின் வேராகும். உள்ளத்தில் ஏற்படும் ஆணவத்தைப் பற்றி சுய ஆய்வு



செய்து கொண்டே இருக்க வேண்டும். எங்காவது ஒரு மூளையில் கர்வத்தின் ஆணவத்தின் தலை உயர்கிறதா? என நம்மை நாமே கண்காணித்துக் கொள்ள வேண்டும். கோபமும் கர்வத்தின் வெளிப்பாடுதான் எவ்விஷயங்களுக்காகக் கோபம் வருகிறது. சகிக்க முடியாதவை எவை? ஏன் சகிக்க முடிவதில்லை. சற்று தன் நெஞ்சின் மீது பார்வையைச் செலுத்தி சீர்தூக்கிப் பார்த்துக் கொள்ள வேண்டும். மனிதனை தீங்கில் தள்ளிவிடும் தற்பெருமை தன்னுள் இருக்கிறதா என்றும் பரிசோதித்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சிறப்புகளும் இருக்கின்றன. குறைகளும் இருக்கின்றன. மனிதன் தன்னை அறிந்து கொள்வதை விட மற்றவர்கள் இவரை அதிகம் அறிந்து கொள்ள முடியாது.

''மனிதன் தன்னைப் பற்றி நன்கு அறிந்தவனாக இருப்பான்.'' **(அல்குர்ஆன் 75:14)**

உங்களிடம் எந்தவொரு பாவமும் நடைபெறவில்லை என்று கூற முடியுமா? உங்களிடம் தவறுகள் நடப்பதில்லையா? உங்களிடம் குறைகள் இல்லையா? இதனை யாரும் மறுக்க முடியாது. உங்களைப் போன்றே மற்றவர்களும்! மற்றவர்களிடமும் தவறுகள் ஏற்படும். அவர்களைக் கேவலமாய் நினைப்பது அழிவும் வீழ்ச்சியும் ஆகும்.

'முஸ்லிம்கள் முஸ்லிம்களின் சகோதரர்கள் ஆவார்கள். இவர்களுக்கு எண்ணற்ற உரிமைகள் உள்ளன. முஸ்லிம் முஸ்லிமின் கண்ணியத்திற்கு இழுக்கு ஏற்படுத்த மாட்டார். அவருக்கு உதவி செய்வார். மற்றவர்களிடம் முஸ்லிமை ஒப்படைத்து விட மாட்டார்' எனக் கூறிவிட்டு நெஞ்சின் பக்கம் சுட்டிக் காட்டியவாறு கூறினார்கள்:

''இறையச்சம் இங்குதான் உள்ளது'' என நீண்டதொரு நபிமொழியில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள்.

முஸ்லிம் தன்னுடைய சகோதர முஸ்லிமைக் கேவலமாகக் கீழானவனாகக் கருதுவதும் தன்னை உயர்ந்தவனாகக் கருதுவதும் ஒருவரின் அழிவிற்கும் நாசத்திற்கும் போதுமானதாகும் என்றும் நபியவர்கள் கூறினார்கள். கேவலமாகக் கருதுவது ஷைத்தானின் பண்பாகும். இதன் காரணமாகவே ஷைத்தான் விரட்டப்பட்டவனாக ஆகிவிட்டான். நிரந்தரமாகச் சபிக்கப்பட்டவனாகவும் ஆகிவிட்டான்.'

''இனி கூலி கொடுக்கப்படும் நாள் வரை திண்ணமாக உன் மீது சாபம் விதிக்கப்பட்டிருக்கும்.'' *(அல்குர்ஆன் 15:35)*

நானே சிறந்தவன் நான் எப்படி என்னை விட கீழானவருக்கு ஸஜ்தா செய்ய முடியும் என ஷைத்தான் கூறினான். தாழ்மையோடு நடந்து கொள்வது தலைசிறந்த செயலாகும். இதன் மூலமாகவே மனிதன் தன்னைத் தானே அகந்தையிலிருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும்.

## பொறாமை, பொல்லாங்கு

மற்றவர்களிடம் இருக்கும் ஒரு சிறப்பைப் பார்த்து, ஒருவரின் சமூக அந்தஸ்தைக் கண்டு, அவரின் கல்வி அறிவை செல்வத்தை வடிவத்தை அல்லது வேறு ஒரு சிறப்பைப் பார்த்து எரிச்சல் அடைவதுதான் பொறாமை ஆகும். அல்லாஹ் அவரைப் போன்று என்னையும் ஆக்கட்டும் என ஆர்வம் கொள்வது பொறாமை ஆகாது. எரிச்சல் அடைந்து அவரின் மீது கோபம் கொண்டு அவரிடம் இருப்பதைப் பிடுங்கிக் கொள்ள வேண்டும் என



நினைப்பது பொறாமை ஆகும். நெருப்பு விறகை எரித்து விடுவதைப் போல பொறாமை நன்மைகளை விழுங்கி விடுகிறது. பொறாமை கொள்ளும் ஒருவர் எண்ணற்ற தீங்குகளில் வீழ்ந்து விடுகிறார்.

பொறாமையின் காரணமாக மற்றவர்களுக்கு மற்றவர் களின் செல்வத்திற்கு அல்லது அவர்களின் கவுரவத்திற்கு இழப்பு ஏற்பட வேண்டும் என நினைக்கிறார். சபையில் ஒருவரின் சிறப்பு கூறப்பட்டால் அவரிடம் என்ன குறைகள் இருக்கின்றன எனக் கண்டறிய வேண்டும் என்பதற்காக துப்பறிவதில் இறங்கி விடுகிறார். சந்தர்ப்பம் கிடைக்கும் போது அதனை மற்றவர்களிடம் எடுத் துரைக்கவும் செய்கிறார். புறம் பேசத் துவங்குகிறார். இவ்வாறே பொறாமை எண்ணிலடங்காத தீமைகளி..ர் வேராக உள்ளது.

ஆதம் (அலை) அவர்களின் வரலாற்றைச் சிந்தித்துப் பார்க்கும் போது ஷைத்தானிடம் அகந்தையோடு பொறாமையும் இருந்தது தெரிய வருகிறது. 'நான் ஆயிரம் ஆண்டுகள் ஸஜ்தாவில் இருந்தேன். எனக்கே இந்த உயர்நிலை கிடைக்கவில்லை. இவருக்கு எப்படி கிடைத்தது? அல்லாஹ் இந்த மண் உருவத்தில் உயிரை ஊதி மாபெரும் அந்தஸ்தை வழங்கி விட்டானோ.' ஷைத்தானின் பகைமையில் நான் உயர்ந்தவன் என்கிற மனப்பான்மையுடன் பொறாமையும் இருந்தது. இதன் காரணமாகவே பகைமையும் பொல்லாங்கும் ஏற்பட்டு விட்டது. கியாமத் நாள் வரை ஆதம் (அலை) அவர்களை யும் அவரின் சந்ததியினரையும் வழிகெடுத்துக் கொண்டே இருப்பேன் என்கிற நிலைக்கு வந்துவிட்டான்.

ஒருவருக்கு இழப்பை ஏற்படுத்த முனைவது, அவ மரியாதை செய்வது, கேலி பேசுவது, இழிவுபடுத்துவது,

பழிவாங்க முனைவது, கொலை செய்யத் துணிவது, குறைகளை வேவு பார்த்துத் திரிவது, துருவி ஆராய்வது, மற்றவர்களிடம் தரக்குறைவாகப் பேசுவது இவை அனைத்திற்கும் பின்னால் பொறாமை இடம்பெற் றுள்ளது. எனவேதான் உன்னுடைய உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொள். முடிந்தால் காலையிலும் மாலையிலும் உன்னுடைய உள்ளத்தில் மற்றவர்களைப் பற்றி பொல்லாங்கும் பொறாமையும் இல்லாமல் சுத்தமாக ஆக்கிக் கொள் என்று கூறியுள்ளார்கள்.

உள்ளம் தெளிவாக இருப்பது தஹஜ்ஜுத் போன்ற இபாதத்துகளை விட முக்கியத்துவம் கொண்ட நற்பண் பாகும். உயர் அந்தஸ்து பெறுவதற்குக் காரணமாகவும் உள்ளது. தஹஜ்ஜுத் தொழுகையைக் குறைத்துக் கூற வேண்டும் என்பது நோக்கமல்ல. மாறாக, கபடமில்லா உள்ளத்திற்குள்ள முக்கியத்துவம் சிறப்பைச் சுட்டிக் காட்டுவதே நோக்கமாகும். பொறாமையும் பொல் லாங்கும் தஹஜ்ஜுத் போன்ற உயர்ந்த இபாதத்துகளை வீணாக்கிவிடுகிறது. ஆட்சேபனை எழும்போது உடனே ஓர் இரவிலேயே தன்னுடைய உள்ளத்தைத் தூய்மை யாக்கிக் கொள்ள வேண்டும். சிலர் உள்ளத்தில் பொறா மையை வளர்த்துக் கொள்வதோடு மற்றவர்களிடமும் சொல்லித் திரிகிறார்கள். மாதக் கணக்கிலும் ஆண்டுக் கணக்கிலும் உள்ளத்தில் தேக்கி வைக்கிறார்கள். இதனால் வேறு வகையான தீங்குகளும் ஏற்படுகின்றன. விரும்பத் தகாத சம்பவம் நடந்து விட்டால் முதலில் நல்லெண்ணம் கொள்வதே சிறந்தது. ஏதேனும் ஒரு விஷயத்தை விவரிக்க வேண்டும் எனில் நல்வார்த்தைகளால் விவரிக்க வேண்டும்.

மற்றவர்களின் எண்ணத்தைப் பற்றி யாரும் எப்போதும் சந்தேகம் கொள்ளக் கூடாது. மற்றவர்களின் எண்ணத்தை நம்மால் அறிந்து கொள்ள முடியாதல்லவா?



சிலர் கூறுகிறார்கள்: ''அவருடைய எண்ணம் கெட்டது'' இவ்வாறு கூறுவது ஒரு வகையில் அல்லாஹ்வின் இல்மிற்கு அறைகூவல் விடுப்பதாகும். இது அனுமதிக்கப்பட்ட தல்ல. ஒருவரின் உள்ளத்தில் இருப்பதை மலக்குகளும் அறிந்து கொள்வதில்லை. 'அவருடைய உள்ளத்தில் என்ன இருந்தது என்பதை நான் அறிவேன்' 'அவர் இதற்காகவே இவ்வாறு கூறினார்' 'என்னோடு இதனா லேயே மோசமாக நடந்து கொண்டார்' என்றவாறு பலரும் கூறுகிறார்கள். ஒருவருடைய உள்ளத்தில் இருப்பதை அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறிய முடியாது. இதனைப் புரிந்து கொள்ள முடியாததால் பொறாமையும் பொல்லாங்கும் ஏற்படுகிறது.

பகைமையை வளர்த்துக் கொள்ளும் ஒருவர் அதைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும் போது பொறாமை ஏற்படுகிறது. இதன் மூலமாக எண்ணற்ற தீங்குகள் உரு வெடுக்கின்றன. 'என்னிடம் யாரும் புகார் கூறாதீர்கள். மற்றவர்களின் தீங்குகளை எடுத்துக் கூறாதீர்கள். முஸ்லிம் களைச் சந்திக்கும் போது என்னுடைய உள்ளம் வெள்ளை யாக இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். என் உள்ளத்தில் யாரைப் பற்றியும் எந்தக் கெட்ட எண்ண மும் ஏற்படக் கூடாது' என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள். இந்நபி மொழியை முன்னிறுத்தி மற்றவர்களை வழிநடத்திச் செல்பவர்கள், தலைமைப் பதவியில் இருப்பவர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து நடைபோடுபவர்கள், சமூகத்தை நடத்திச் செல்பவர்கள் இவ்வாறான பொறாமை பொல் லாங்கில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

## சினம், கோபம்

இன்னும் பல தீமைகளுக்கு வேராக இருப்பது கோபம்தான். கோபத்தின் சுவாலை வெகு சீக்கிரம் சீறிப்

பாய்கிறது. சீறிப் பாய்ந்து செல்லும் போது கிடைக்கும் பொருள்களைக் கரித்து நாசமாக்கி விடுகிறது. ஒரு பக்கம் மூடினால் மறுபக்கம் கட்டுப்பாட்டை உடைத்துக் கொண்டுவெளியேறுகிறது. கோபத்தால் உடல் கட்டுக் கடங்காமல் போய் முகம் சிவந்து விடுகிறது. நரம்புகள் புடைத்து விடுகின்றன. நா தழுதழுக்கும், ரத்தம் கொதிக்கும் இதன் காரணமாக உடலும் பாதிக்கிறது. உள்ளத்திலும் செயலிலும் அணுகுமுறையிலும் ஒவ்வொரு விஷயத்திலும் பாதிப்பு ஏற்படுகிறது. வீட்டில் கோபம் வந்தால் பாத்திரங்கள் பறக்கின்றன. மனைவிக்கு அடி விழுகிறது. பிள்ளைகள் ஈவிரக்கமின்றி நடத்தப்படுகிறார்கள். சபையில் இருக்கும்போது கோபம் வந்துவிட்டால் வாயைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. குத்திப் பேசி பரிகசிக்கும் அளவிற்குச் சென்று விடுவார்கள்.

கோபம் வருவது பெரிய விஷயமல்ல. ஒரு வகையில் கோபம் வருவது அவசியமும் கூட. கோபமின்றி மனிதன் தன்மானத்தையும் தீனையும் பாதுகாக்க முடியாது. கோபம் என்பது இயல்பான ஒன்றுதான். மனிதனின் இயல்பில் இச்சையும் ஆசையும் உள்ளது போன்று கோபமும் இயல்பாகவே உள்ளது. கோபம் வருவது மனித இயல்புதான் என்றாலும் கோபத்தை வரவைப்பது, தவறான இடத்தில் பிரயோகிப்பது போன்றவை கட்டுப்படுத்த வேண்டியவை.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தோழர்களின் சுபாவங்களை அறிந்து அதற்கேற்ப சீர் திருத்தம் செய்து வந்தார்கள்; வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். ஆலோசனைகளைக் கொடுத்தார்கள். ஒரு தோழர் நபியிடம் வந்து, ''அல்லாஹ்வின் தூதரே! எனக்கு அறிவுரை கூறுங்கள்'' என்றார். நபியவர்கள் ''கோபம் கொள்ளாதே'' என்றார்கள். ''தோழர் இன்னும்



ஏதேனும் அறிவுரை கூறுங்கள்'' என்றார். நபியவர்கள் ''கோபம் கொள்ளாதே!'' என்றார்கள். மூன்றாம் முறை ''எனக்கு அறிவுரை கூறுங்கள்'' என்றார். அப்போதும் நபியவர்கள் ''கோபம் கொள்ளாதே!'' என்றார்கள்.

இந்நபிமொழியில் கோபத்திலிருந்து விலகியிருக்க வேண்டும் என்கிற அழுத்தமும் உள்ளது. அத்தோடு நபியிடம் அறிவுரை கேட்ட தோழரிடம் இக்குணம் இருந்ததால் அதை உணர்த்தியுள்ளார்கள். நபியவர்கள் கோபத்திலிருந்து தப்பிக்கும் உபாயங்களையும் கூறியுள்ளார்கள். ''எவருக்கேனும் கோபம் வந்து விட்டால் உட்கார்ந்து கொள்ளவும்; உட்கார்ந்து இருக்கும்போது கோபம் வந்தால் படுத்துக் கொள்ளவும்'' ஆனால் மக்கள் இதற்கு மாற்றமான வகையிலேயே நடந்து கொள்கிறார்கள். கோபம் வரும்போது படுத்திருப்பவர் எழுந்து நின்று கொள்கிறார். நின்றிருக்கும்போது கோபம் வந்தால் கையில் கம்பையே ஆயுதமாக எடுக்கிறார்.

கோபத்தை அடக்குவதற்கு உளவியல் குறிப்பின்படி நின்று கொண்டிருக்கும்போது கோபம் வந்தால் கையில் ஏதேனும் ஆயுதம் இருந்தால் உடனே கீழே போட்டுவிட வேண்டும். ஏனெனில் கோபத்தில் மனிதன் என்ன செய்வான் என்று தெரியாது. கோபத்தினால் கண்கள் குருடாகிப் போய்விடுகின்றன. அறிவு கெட்டுப் போய் விடுகிறது. மூளை செயல் இழந்து போய் விடுகிறது. இதன் காரணமாகவே கோபம் வரும்போது நின்று கொண்டிருந்தால் உட்கார்ந்து கொள்ள வேண்டும். உட்கார்ந்திருந்தால் படுத்துக் கொள்ள வேண்டும். ஒளு செய்து கொள்ள வேண்டும். ஒளுவின் மூலம் கோபம் விலகிப் போகிறது. ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேட வேண்டும் எனக் கட்டளையும் உள்ளது.

''விரட்டப்பட்ட ஷைத்தானிடமிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறேன்'' என்பதை ஓத வேண்டும் என்கிற அறிவுறுத்தலும் இருக்கிறது.

வீட்டிலிருக்கும்போது கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக மிக அவசியமாகும். பலவீனமானவர்கள் மீது கோபத்தைக் காட்டுவது கோழைத்தனமாகும். அலுவலகத்தில் கடைநிலை ஊழியர்கள் கோபத்தைத் தீர்த்துக் கொள்வதற்குத் தகுதியானவர்களாய்க் கருதப்படு கிறார்கள். வீட்டு வேலைக்காரனிடம் கோபத்தைக் காட்டுவது எளிது. தன்னை விட வலிமையானவரிடம் கோபத்தைக் காட்டுவதுதான் தைரியசாலிக்கு அழகு. ஆனால் தன்னை விட பலத்தில் குன்றிய நபரையே மனிதன் தேடிக் கொண்டிருக்கிறான்.

கோபத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்; மன்னித்து விட வேண்டும் என்பதற்கு நிறைய அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது. பிழை பொறுப்பதையும் மன்னித்தலையும் குர்ஆன் ஒரு சேர எடுத்துரைத்துள்ளது. இறையச்சமுள்ள வர்கள் இதன் பக்கம் ஓடி வர வேண்டும். இதுதான் சுவனத்தின் பாதை என்றும் அல்லாஹ் கூறுகிறான்.

''அவர்கள் எத்தகையவர்கள் என்றால் வசதியுள்ள நிலையிலும் வசதியற்ற நிலையிலும் செலவழிப்பார்கள். மேலும் அவர்கள் சினத்தை அடக்கிக் கொள்வார்கள். மேலும் மக்(களின் தவறு)களை மன்னித்து விடுவார்கள்.'' *(அல்குர்ஆன் 3:134)*

சுவனத்தின் பாதையில் நின்று கொண்டு சுவனத்தை அடைய விரும்புபவர்களுக்கு இத்தயை பண்புகள் கட்டாயம் வேண்டும். மன்னிப்பு என்பதுடன் கோபத்திற்கு நெருங்கிய தொடர்பு உள்ளது. மன்னித்து விடுவதும் கொடையின் பண்பாகும். பரந்த உள்ளம் கொண்டவர்கள் வெறுப்பைக் கட்டுப்படுத்திக் கொள்வார்கள். மன்னித்து விடுவார்கள். குறுகிய உள்ளம் கொண்டவர்கள் பணத்தையும் செலவிட மாட்டார்கள். சேவையும் செய்ய மாட்டார்கள். கடினமான வார்த்தைகளைக் கேட்டு விட்டால் கவுரவத்திற்கு சறுக்கல் ஏற்பட்டு விட்டால் உடனே குறுகிய உள்ளத்திற்குள் பெரும் புயலே உருவெடுத்து விடும். பரந்து விரிந்த உள்ளம் பெற்றவர்களுக்கு கோபப் புயல் உருவாவதில்லை.



குறுகிய உள்ளம் கொண்டவர்கள் பிறரை மன்னிப்ப தில்லை. குர்ஆனோ பிறரை மன்னித்து விடுங்கள் என்கிறது.

''இனி எவர் மன்னித்து விடுகிறாரோ மேலும் சீர்திருத்தம் செய்கிறாரோ அவருடைய கூலி அல்லாஹ் வின் பொறுப்பில் உள்ளது.'' *(42:40)*

செய்த தவறுக்குப் பழிவாங்க அனுமதி இருக்கிறது. சரிக்குச் சரியாக இருக்க வேண்டுமே தவிர நீண்டு விடக் கூடாது.

''எவர் தீமையைக் கொண்டு வருவாரோ அவருக்கு அவர் செய்த தீமையின் அளவுக்குத்தான் தண்டனை கொடுக்கப்படும்.'' *(அல்குர்ஆன் 6:160)*

தோழர் ஒருவர் நபியிடம் கேட்டார்: ''ஒரு பணி யாளரை எத்தனை முறை மன்னிக்கலாம்?'' நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அமைதியாக இருந்தார்கள். மீண்டும் அதே கேள்வியை தோழர் கேட்டபோது நபியவர்கள் ''எழுபது முறை'' என்றார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர் களுடன் நெருக்கமாக இருந்தவர்கள் கூறுகிறார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ''சீ...!'' என்று கூடச் சொன்னதில்லை. ''இதை ஏன்செய்தாய்?'' ''அதை ஏன் செய்யவில்லை'' என்றும் கேட்டதில்லை.

அபூபக்ர் (ரழி) அவர்களின் மகளும் நபி ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மனைவியுமான ஆயிஷா (ரழி) அவர்கள் மீது பழி சுமத்தப்பட்டிருந்த போது அபூபக்ர் (ரழி) அவர்களிடம் உதவிப் பணம் பெற்று வந்த ஒருவரும் பழி சுமத்தியவர்களில் ஒருவராக இருந்தார். இவ்விஷயம் தெரிய வந்தவுடன் அபூபக்ர் அவர்கள் உதவிப் பணத்தை நிறுத்தி விட்டார். இதனைத் தொடர்ந்தே "உங்களை அல்லாஹ் மன்னித்து விடுவதை நீங்கள் விரும்பவில்லையா?' என அல்லாஹ் கேட்டான்.

ஒருவர் காலை முதல் மாலை வரை நூறு பாவங் களைச் செய்கிறார். நாமும் செய்கிறோம். பிறகு கையை உயர்த்தி அல்லாஹ்விடம் மன்னிப்பு கேட்டால் மன்னித்து விடுவான் என நம்புகிறோம். அவ்வாறாயின் நாமும் மற்றவர்களை அதிகம் மன்னிக்க வேண்டும். மன்னிக்கும் விஷயத்தில் மனிதர்கள் நிறைய கஞ்சத்தனம் செய் கிறார்கள். ஒருவரிடம் மன்னிக்கும் பண்பு இருக்கும் போது கோபத்தைக் கட்டுப்படுத்துவது மிக எளிதாகும்.

## வீண் சந்தேகம்

வீண் சந்தேகத்தால் குழப்பங்கள் உண்டாகின்றன. 'எச்சரிக்கையாக இருங்கள். விழிப்போடு இருங்கள். வீண் சந்தேகம் கொள்ள வேண்டாம்' என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள்.

அல்லாஹ் கூறுகிறான்:

''இறைநம்பிக்கை கொண்டவர்களே! அதிகமாக சந்தேகம் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் சில சந்தேகங்கள் பாவமாக இருக்கின்றன.'' *(அல்குர்ஆன் 49:12)*



எவ்வித ஆதாரமுமின்றி ஒருவர் மீது ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்வது அல்லது உறுதியிட்டுக் கூற முடியாத ஒன்றைப் பரப்புவது போன்றவற்றிற்கு அனுமதி யில்லை. உறுதி செய்யப்பட்ட விஷயமானாலும் கண்ணால் பார்த்த விஷயமானாலும் அதனைச் சொல்வதும் பாவ மாகும். விபச்சாரம் நடந்ததைப் பார்த்த பின்னும் அதற் கான மூன்று சாட்சிகளைக் கொண்டுவர முடியாத நிலையில் அதனைக் கூறுவதும் கூடாது. இவ்வாறு செய் தால் எண்பது கசையடிகள் வழங்குமாறு தீர்ப்பளிக்கவும் செய்யலாம். தீமையை விளம்பரம்படுத்திக் கொண்டு இருக்கக் கூடாது என்பதுதான் தீனின் நோக்கமாகும்.

குர்ஆன் வீண் சந்தேகங்களைத் தடை செய்துள்ளது. நபிமொழியிலும் இதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் வீண் சந்தேகங்கள் பெரும் பொய்யாக உள்ளன. எண்ணத்தின் மீது ஏற்படும் வீண் சந்தேகம்தான். மிகப் பெரிய பாவம் ஆகும். பலர் இந்நோய்க்கு ஆளாகியுள்ளனர். அவர்களின் எண்ணம் சரியில்லை என்று சிலர் கூறுகின் றனர். இவ்வாறான வீண் சந்தேகங்கள் இன்னும் பல தீமைக்கு வேராகும்.

நல்லொழுக்கத்தைப் பெறுவதின் வரிசையில் கடைசி யாக எப்போதும் கண்காணிப்பில் இருக்க வேண்டியது நாவாகும். எண்ணற்ற நபிமொழிகளில் இதற்கான அறிவுரைகள் வழிகாட்டுதல்கள் அறிவுறுத்தல்கள் கூறப் பட்டுள்ளன. சுருக்கமாகக் கூறினால் நரகத்தில் மனிதனை தலைக்குப்புற கவிழ்த்து விடக் கூடியது நாவுதான். கேலி பேசுவது, பழித்துரைப்பது, துப்பறிவது, வேவு பார்ப்பது, வீண் சந்தேகம் கொள்வது, பொறாமை கோபம் கொள்வது, புறம் பேசுதல் போன்றவையும் இதில் இடம்பெற்றுள்ளன.

புறம் கூறல்

சமூகத்தில் பரவலாகியிருக்கும் ஒரு தீங்குதான் புறங்கூறல். தன் சகோதரன் ஒருவனை அவன் இல்லாத போது தவறாகப் பேசுவதுதான் புறங்கூறல் ஆகும். இதனையும் குர்ஆன் தீங்கு என்றே எடுத்துரைக்கிறது.

''உங்களில் ஒருவர் மற்றவரைப் பற்றி புறம் பேச வேண்டாம். உங்களில் எவரேனும் இறந்துவிட்ட தன் சகோதரனின் இறைச்சியை உண்ண விரும்புவாரா என்ன? பாருங்கள் நீங்களே அதனை அருவெறுப்பாய்க் கருது கிறீர்கள்.'' *(அல்குர்ஆன் 49:12)*

இறந்து போயிருக்கும் ஒருவரின் உடலை இன்னொருவர் உண்ணத் துவங்கினால் எப்படி இருக்கும்? ஒருவர் இல்லாதபோது உயிர் உடலில் இல்லாதிருப்பது போன்று அவரைப் பற்றி குறை கூறத் தொடங்கினால் அதற்குப் பெயர் புறங்கூறல்.

'அவரிடம் இந்தக் குறை உள்ளது. நான் அவருக்கு முன்னால் இதைக் கூற முடியும்' எனப் பொதுவாக மக்கள் கூறுகிறார்கள். அவரிடம் குறை இருந்தும், அவருக்கு முன் உங்களால் அதைக் கூற முடியும் என்றாலும் அதனை அவர் இல்லாத போது கூறுவது புறம் பேசுதல் ஆகும்.

தோழர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் கேட்டார்கள்: ''குறை அவரிடம் இருந்தாலுமா?'' நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள்: ''குறை அவரிடம் இல்லாதிருந்தால் அவர் மீது நீங்கள் அவதூறு சுமத்துகிறீர்கள். குறை அவரிடம் இருந்தால் அப்போதும் இது புறம் கூறல்தான்.''

மனித மாமிசம் ஹலால் ஆனதல்ல. ஒரு தோழர் கேட்பதாக நீண்ட நபிமொழி ஒன்றில் வருகிறது.



''அல்லாஹ்வின் தூதரே! எனக்கு அறிவுரை கூறுங்கள்.'' நபியவர்கள் ''எவரையும் தீங்காகப் பேசாதீர்கள்'' என்றார்கள். அதே நபிமொழியில் ''எந்த ஒரு நன்மையையும் கேவலமாய்ப் பார்க்காதீர்கள்'' என்றுள்ளது. சகோதரனைப் பார்த்து சிரிப்பதும், புன்முறுவல் பூப்பதும், மலர்ந்த முகத்துடன் சந்திப்பதும் நன்மைகள் ஆகும்; சிறந்த குணங்களாகும்.

நற்குணங்களை பல்வேறு சான்றுகளுடன் அறிமுகம் செய்யலாம். நற்பண்புகளின் தீய குணங்களின் நீண்ட பட்டியலே உள்ளது. இவை யாவும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. ஒரு நல்லொழுக்கத்திலிருந்து எண்ணற்ற நல்லொழுக்கத்தின் கிளைகள் பரந்து விரிந்து செல்கின்றன. சில தீய குணங்கள் வேர் போன்ற தன்மையைக் கொண்டவை. அதிலிருந்து இன்னும் பல வேர்கள் வளர்கின்றன. இவற்றையெல்லாம் ஒன்று திரட்டி எடுத்துரைப்பது இயலாத காரியம். திறவுகோல் போன்ற சில அடிப்படையான விஷயங்களைத் தேர்வு செய்து கொண்டு அதன் மீது முழுக் கவனம் செலுத்தினால் ஒருவரின் பயிற்சி சிறப்பு அடையும்.

பயிற்சிக்கு அதிகளவு கல்வி தேவையாக இருப்பதில்லை. எதை மனிதன் கற்றானோ அதை அமல்படுத்துவது அவசியமாகும். அமலின் மூலமாகத்தான் பயிற்சி கிட்டுகிறது. செவிசாய்த்துக் கொண்டிருப்பதால் பயிற்சி கிட்டுகிறது. அடிப்படையான விஷயங்கள் நமக்குள் வந்து விட்டால் இன்னும் பலவும் அதனுடன் நமக்குள் வந்து விடுகின்றன. நான் கூறியுள்ள ஐந்து விஷயங்கள் பரந்து விரிந்தவை. அகத்தோடும் புறத்தோடும் அவற்றின் தொடர்புகள் இருக்கின்றன. இன்னும் அல்லாஹ்வோடும் அடியானோடும் இருக்கின்றன.

நம்மைக் குறித்து ஓர் ஆய்வு செய்வது அவசியமாய் உள்ளது. நம்முள் பொய் இருந்தால் உடனே அதிலிருந்து நம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். உள்ளத்தில் கர்வம் இருந்தால் அதை விட்டு விட வேண்டும். பொறாமை பொல்லாங்கு, சினம், கோபம், வீண் சந்தேகம், துருவித் துருவி ஆராய்தல், புறங்கூறல் ஆகிய வற்றிலிருந்தும் தூரமாக வேண்டும். நாவைப் பாதுகாத்து நல்வார்த்தைகளை மட்டுமே பயன்படுத்திவர வேண்டும். இல்லையேல் மவுனமே சிறந்தது.

உயர் ஒழுக்கத்தை அடைவதற்கு இந்த ஐந்து அடிப் படையான குணங்கள் தேவையாக உள்ளன. இதற்கு ஐந்து சிறப்பு அம்சங்களும் ஐந்து தீய அம்சங்களும் உள்ளன. இந்த ஐந்து குணங்களும் நமதாக்கிக் கொண்டு உறுதியாகக் கைப்பற்றிக் கொண்டால் அதன் மூலம் எடைத்தட்டில் அதிக கனமுள்ள உயர்ந்த ஒழுக்கத்தைப் பெற முடியும். கியாமத் நாளில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உயர் ஒழுக்கமுள்ள வர்கள் தான் இருக்க முடியும். இதனை ஒப்பிட்டுப் பார்த்து இது எவ்வளவு பெரிய மதிப்பு மிக்கது என்பதை கணித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் அமல்கள் செய்வதற்கான தவ்ஃபீக்கை வழங்குவானாக!